# விடுதலைப்புலிகள்

குரல் 102 தை -- மாசி 2002 அன்பளிப்பு 10/=




"தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்துச் சிங்கள அரசுடன் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமத்துவமாக, சுதந்திரமாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தகமையுடன் அவர்களது உண்மையான போராட்டச்சக்தி என்ற அங்கீகாரத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதாயின் எமது இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும்."

- மாவீரர்நாள் உரை 2001 -

# சமாதானம் நோக்கிய புலிகளின் முயற்சிகள்

**தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாணும் வரலாற்று வாய்ப்பு மீண்டும் ஒருமுறை சிங்கள அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது.**

**சிறிலங்காவின் புதிய அரசாங்கம் பதவியேற்ற சில நாட்களில் புலிகள் இயக்கம் ஒரு மாதகால போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தது. அதை அனுசரித்து சிங்கள அரசாங்கமும் ஒரு மாதகால போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தது. இப்போது போர் நிறுத்தம் இருதரப்பினராலும் மேலும் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது.**

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட முன்னர், எமது மக்கள் அனுபவித்துவரும் வாழ்வியல் துன்பங்கள் நீக்கப்பட வேண்டும் என்ற புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டிற்கு இணங்க முதற்கட்டமாக புதிய அரசாங்கம் பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தியுள்ளது.

புலிகள் இயக்கம் தாம் அறிவித்த போர்நிறுத்தத்தை நேர்மையாகக் கடைப்பிடித்து வருவதுடன் சமாதான முயற்சிக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் பத்துப் போர்க்கைதிகளை விடுதலைசெய்து சிங்கள அரசாங்கத்திற்கும்-சிங்கள மக்களிற்கும் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளது.

''காணாமல் போனபடையினரின் பெற்றோர் சங்கம்'' அண்மையில் வன்னி வந்தபோது அவர்களை அன்புடன் வரவேற்ற புலிகள் இயக்கம், விடுவிக்கப்பட்ட பத்து போர்க்கைதிகளையும் அவர்களிடமே ஒப்படைத்து துன்பப்பட்ட அந்தச் சிங்களப் பெற்றோரைக் கௌரவித்து வழியனுப்பி வைத்துள்ளது.

போர் நிறுத்தம்-பொருளாதாரத்தடைத் தளர்வு - சிங்களப் போர்க்கைதிகள் விடுதலை - காணாமல் போனபடையினரின் பெற்றோர் சங்கத்தின் வருகை... என சமாதான சூழலை உருவாக்கி, பரஸ்பரநம்பிக்கைகளைக் கட்டியெழுப்பும் ஆரம்ப முயற்சிகள் நம்பிக்கை தரும் வகையில் நடைபெறுகின்றன.

ஆயினும், சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இவை போதுமானவையாக இல்லை.

ஒரு நிரந்தரப் போர்நிறுத்தம் - இராணுவ நெருக்குவாரங்கள் அகற்றப்படல் - புலிகள் இயக்கம் மீதான தடைநீக்கம் என அரசியல் பேச்சுவார்த்தை மேசைக்குச்செல்லமுதல் செய்யப்படவேண்டிய சமாதானப்பணிகள் நிறையவே உள்ளன.

சிங்கள மக்களும் - தமிழ்மக்களும் தமது வாக்குரிமைமூலம் சமாதானத்திற்கு ஆணை கொடுத்துள்ளனர்.

புலிகள் இயக்கமே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என, அவர்கள், தேர்தல் மூலம் உலகறிய அரசியல் பிரகடனம் செய்துள்ளனர்.

இலங்கைத்தீவில் நிரந்தர சமாதானம் மலரவேண்டுமென சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது.

சமாதான முயற்சிகளுக்கு புலிகள் இயக்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது.

இது சமாதானத்திற்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் என சிங்கள தேசத்திலுள்ள சமாதானவிரும்பிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இப்போதே, பொ. ஐ. முன்னணியும் - ஜே. வி. பி யினரும் - சிங்கள உறுமயக்காரர்களும் சமாதானத்திற்கு எதிராகச் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

சிங்கள தேசத்திலிருந்து வெளிவரும் சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகளில் பல, சிங்கள மக்கள் அளித்துள்ள சமாதான ஆணைக்கு புதிய வியாக்கியானம் கொடுத்து சமாதான விரோத உணர்வுகளை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

''என்ன விலை கொடுத்தேனும் சமாதானத்தைக்காண சிங்களமக்கள் வாக்களிக்கவில்லை'' என எதுவுமே நடைபெறமுன்னரே எல்லாமே நடைபெற்றுவிட்டது போல கருத்துக்களைப் பரப்பி பேரினவாதிகளை உசுப்பிவிட அவை முனைகின்றன. இந்த நச்சுக்கருத்தை நியாயப்படுத்தி கதிர்காமரும் ஒரு ஆங்கில நாளிதளுக்குச் செவ்விகொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளைக் குழப்ப முனைவோரை ஒடுக்குவேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சூளுரைத்துள்ளார்.

இனி, ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான புதிய அரசாங்கத்தின் கைகளிலேயே சமாதான முயற்சியின் முன்னேற்றம் தங்கியுள்ளது. ○

# புதிய அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டியவை.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு தலைவர் பிரபாகரன் அறிவித்திருந்த ஒருமாதகால போர் நிறுத்தத்திற்குவிரைவாகப் பதிலளித்த புதிய அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், தாமும் ஒருமாதகால மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்கப்போவதாக அறிவித்தது தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

இன்று வரை, இருதரப்பினரும், போர்ஓய்வைச் சிறப்பாகப்பேணி அமைதி முயற்சிக்கு நம்பிக்கையூட்டிவருகின்றனர்.

சிறிலங்கா நாடாளுமன்றத்திற்கான தேர்தல் பரப்புரைகளின் போதே திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள், தமது கட்சி ஆட்சியமைத்தால் புலிகள் இயக்கம் மீதான தடையை அகற்றி - அவர்களுடன் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கப்போவதாக கூறுரைத்திருந்தார்.

தமிழ்மக்களும் - சிங்களமக்களும் சமாதானத்திற்காகப் புள்ளடிபோட்டு அதைச் செயற்படுத்துமாறு ரணில விக்கிரமசிங்கவின் தலைமையிலான புதிய அரசாங்கத்திற்கு மக்களாணை வழங்கியுள்ளனர்.

அமைதிமுயற்சிக்கான ஆரம்பக்கட்டத்தை நம்பிக்கைதரும்வகையில் - அவர்நகர்த்திவருவது பாராட்டத்தக்கது.

புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கு உறுதுணையாக இருந்து தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அமைதிவழியில் அரசியல்தீர்வு காண புலிகள் இயக்கம் முழுமையான வகையில் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளது.

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை ஏற்றுக்கொண்டு அதைத் தேர்தல் விஞ்ஞாபனமாகவும் வெளியிட்டு தேர்தலில் நின்ற தமிழர் கூட்டமைப்பு தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளது.

இது புலிகள் இயக்கத்திற்குக் கிடைத்த மாபெரும் அரசியல் வெற்றியாகும்.

இது ஒருபுறமிருக்க

அரச அடக்குமுறைக்கும் - அதன் இனஅழிப்புப் போருக்குமெதிராக கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக புலிகள் இயக்கம் சளைக்காது போராடி வருகின்றது. புலிகளை ஒழித்துக்கட்டும் எண்ணத்துடன் உலக நாடுகள் பலவற்றின் உதவியோடு சிங்கள அரசின் முப்படைகள் தொடுத்துவரும் போரை புலிகள் இயக்கம் தனித்து நின்று வெற்றிகரமாக எதிர்கொண்டு வருகின்றது. போரில் காத்திரமான வெற்றிகளையும் பெற்று - கணிசமான நிலப்பரப்புகளைத் தன் வசப்படுத்தி - அபாரமான இராணுவ பலத்துடன் புலிகள் இயக்கம் திகழ்கின்றது.




முன்னைய அரசாங்கம் நாட்டின் தேசிய வளங்களைத்திரட்டி - புலிகளுக்கு எதிராகப் போர் புரிந்தபோதும் போர்முனையில் பாரிய இராணுவ சாதனைகளைப் படைக்கமுடியவில்லை. அதேசமயம், நாட்டின் தேசிய பொருளாதாரத்தை அதளபாதாளத்திற்குள் கொண்டுசென்றுவிட்டுள்ளது.

உலகமே ஒப்புக்கொண்டுள்ள இந்த அரசியல்-இராணுவ - பொருண்மிய உண்மைகளை புதிய அரசாங்கம் நேர்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு - பேச்சுவார்த்தைகள் என்ற நிலைகள் கடந்தகாலங்களில் எழுந்தபோது, அவை சிங்களப் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் அளவுக்குள் இருக்கவேண்டும் என்பதிலேயே சிங்கள ஆட்சியாளர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்துவந்தார்கள். பேச்சுவார்த்தைத் தோல்விகளுக்கும் - ஒப்பந்தக்கிழிப்புகளுக்கும் அடிப்படைக்காரணம் இதுதான்.

கடந்த 45 வருடகாலமாக சிங்கள ஆட்சியாளர்கள் செய்துவரும் இந்த வரலாற்றுத்தவறை மாற்றியமைத்து, திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் புதிய வரலாறு படைக்க முயலவேண்டும்.

தமிழரின் தேசிய அபிலாசைகளை பேரினவாதிகளின் ஆதிக்க அபிலாசைகளுடன் இணைத்துப் பார்ப்பதை புதிய அரசாங்கம் முற்றிலும் கைவிடவேண்டும்.

தமிழர்க்கு உரிமை வழங்குவது சிங்கள இனத்தைக் கடலினுள்தள்ளவே வழிவகுக்கும் என்ற மகாவம்சகாலத்துக் கற்பனைக்கதைகளையும் - இந்தப் பைத்தியக்காரத்தனமான சித்தாந்தத்தை இன்று வரை கெட்டியாகப் பிடித்துக்கொண்டுவரும் பேரினவாதிகளின் கூக்குரலையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புறந்தள்ளவேண்டும்.

மேலும், மோதல்தவிர்ப்பை போர்நிறுத்தம் என்ற கனபரிமாணத்திற்குள் விரியச்செய்வித்து; பொருளாதாரத் தடைகளை – போக்குவரத்துத் தடைகளை முற்றாக விலக்கி, சிறைகளிலும் - இராணுவ முகாம்களிலும் துயருறும் தமிழர்களை விடுவித்து, தமிழரை இலக்காகக்கொண்ட இனவெறிச்சட்டங்களை நீக்கி தமிழ் மக்கள் இயல்பாக வாழும் ஒரு உகந்த சூழலை ஏற்படுத்த புதிய அரசாங்கம் பாடுபடவேண்டும். அத்துடன் புலிகள் இயக்கம் மீதான தடையை அகற்றி தமிழரின் அரசியல் பிரதிநிதிகளாக அவர்களை ஏற்றுக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவுகளைத் திறந்துவிடவேண்டும்.

சர்வதேச அழுத்தங்களையும் - உள்ளூர் நெருக்கடிகளையும் - பொருண்மிய சிக்கல்களையும் வெற்றிகொள்வதற்காகப் பேச்சுவார்த்தை என்ற தந்திர அரசியலை கடந்த கால ஆட்சியாளர்கள் நடாத்தியுள்ளனர்.

இந்த முயற்சியும் அப்படியாகிவிடுமோ! என்ற வரலாற்றுச் சந்தேகம் எமது மக்கள் மதியில் உள்ளதையும் புதிய அரசாங்கம் புரிந்துகொண்டு - சமாதானம் மலர நேர்மையாக உழைத்து இத்தீவில் அமைதிமலர புதிய அரசு வழிவகுக்கவேண்டும். □

# ஒரு மாமனிதனின் மரணம்.

மீண்டும் எம் தாயகத்தில் சாவு தவறுசெய்துவிட்டது. எமக்கு ஆறாத்துயரளித்து எம்மண்ணின் ஆற்றலனை அள்ளிச்சென்றுவிட்டது. தன்காலம் முழுதும் எம் தாயகத்தைக் காதலித்து, எம்



வாழ்வின் விடுதலை விரும்பி, எமது பண்பாட்டைப் பேணி, வரலாற்று எச்சங்களை பாதுகாத்து இவைகளே தன்முதன்மைப் பணியாக கொண்டியங்கிய மாமனிதர் கலைஞானி காலமானார் என்ற செய்தி எமக்குள் பேரிடியாக இறங்கியது. செல்வரத்தினம் என்ற இவரின் சொந்தப் பெயர் வெளியே தெரியாது, கலைஞானி என்ற காரணப் பெயரே இவருக்கு நிலைத்துவிட்டது.

ஆரம்பத்தில் ஒரு புகைப்பட கலையகத்தின் உரிமையாளராக, படப்பிடிப்பாளராக, வாழ்வை ஆரம்பித்தார். ஸ்ரான்லி வீதியிலிருந்த இவரின் நிறுவனம் முன்னர் கலைஞர்கள் சங்கமிக்கும் இடமாக ஒருகாலத்தில் பேசப்படும்படியாக பிரபலம் பெற்றிருந்தது. யாழ்ப்பாணம் குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், இராணுவக் கெடுபிடிகளால் இடம்பெயர்ந்து, பல இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தபோதும் தனித்து நின்று தமிழீழத்தின் அரும் பொருட்காட்சியகம் உருவாக்கி செயற்பட்டார். கலைஞானி அவர்கள் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் சேகரித்த கலைப் பொருட்கள், தொல்பொருட்கள், பண்டைய நாணயங்கள், ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் படிகள் என தன் ஆற்றலுக்கு மீறிய வகையில் பேணிப்பாதுகாத்தார்.

தான் தேடிவைத்திருந்த அருங் கலைப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் பல லட்சம் ரூபாவுக்கு விலை பேசிய போது "கோடி கொடுத்தாலும் கொடேன்" என அடித்துக்கூறி தாய்மண்ணிலேயே மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் அவற்றைப் பேணிப் பாதுகாத்தார். சொந்த இருப்பிட வசதியோ, அன்றி நிலையான வசிப்பிடமோ இல்லாத நிலையிலும் அனைவரும் வியக்கும் வண்ணம் தொல் பொருட்க்ளையும், அரும் பொருட்களையும் தன் உயிராகப் பேணி வந்தவர். தன் இப்பணிக்கு திருமணம் ஒரு தடையாக இருந்துவிடுமோ என்றஞ்சிப்போலும் தன் வாழ்வை பிரம்மச்சாரியாகவே கழித்துப் போனார்.

இவரின் பணியின் சிறப்பறிந்து, சீர்மையறிந்து எமது விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தொகைப் பெரும்பணத்தையும், பொருட்களை வைத்துப் பராமரிக்க பெரும் வீடொன்றையும் வழங்கியிருந்தது. பின்னர் 1991ம் ஆண்டு விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடத்திய முத்தமிழ் விழாவில் எம்மண்ணுக்கு பணியாற்றிய சமூக சேவைக்கான மாமனிதர் விருதை எமது தேசியத் தலைவர் இவருக்கு வழங்கி சிறப்புச் செய்திருந்தார். இவரின் மறைவின் மூலம் எம் தாயகத்தின் ஒரு ஆற்றலனை இழந்து விட்டோம். தாயகத்தின் சார்பாக இந்த மாமனிதனுக்கு விடுதலைப் புலிகள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ☆

# அரபாத்தும் அமைதியும் ஆயுதப்போராட்டமும். ஒரு விபரீத சமன்பாடு

- க. வே. பாலகுமாரன் -

மீண்டுமொரு போர்நிறுத்தம்; மீண்டுமொரு பேச்சுவார்த்தை; மீண்டும் அமைதிக் கனவுகள்; மீண்டும் நம்பிக்கைகள்; மீண்டும் இவையாவும் முறிவு; மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில். 1994ம் ஆண்டிலிருந்து பாலத்தீனத்தில் நடக்கும் தொடர் கதை இதுதான். பிணக்குகளிலிருந்து நீங்கி இணக்கமாக, இயல்பாக வாழத்தான் மனிதர்கள் எங்கும் துடிக்கிறார்கள்; ஆனாலும் பிணக்குகள் நீடிக்கின்றன; நம்பிக்கைகள் இடைநடுவில் பொய்க்கின்றன; யார் அல்லது எவை இதற்குக் காரணம்? இனப்பிணக்கின் ஒரு பிணக்காளராக, மோதலின் ஒரு தரப்பினராகவிருக்கும் நாம் இதற்கான விடையை காண விளைகின்றோம். ஒருதரப்பாக எமது தரப்பிலிருந்து பதிலைத் தேடாமல் வரலாற்றின் தரப்பிலிருந்தே விடையைத் தேடுகின்றோம். பாலத்தீனத்தின்மீது எமது பார்வையைப் படரவிட்டு பட்டறிவுகள் எமக்குண்டா என அறியமுயல்கிறோம்.

உலகிலேயே மிகச்சிக்கலானதாக மிகநீண்டதாக புரிதலுக்கே கடினமானதாக விளங்குவது பாலத்தீனிய இசுரேலிய சிக்கலே. 1948ஆம் ஆண்டு இசுரவேல் உருவாக்கப்பட்டபின் இற்றைவரை பல போர்கள் இச்சிக்கலின் நேரடி, மறைமுக விளைவுகளால் நடந்தேறிவிட்டன. 1948,1956, 1967, 1973 என இவ்வாண்டுகளில் போர்கள் நடந்து இறுதியாக வளைகுடாப் போருக்கும் இச்சிக்கல் மறைமுகக் காரணமாயிற்று. எனவே வளைகுடாப்போர் வெற்றியின் பின்னர், 1991 ஆம் ஆண்டு மார்ச்சில் அப்போதைய அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஸ் ''இனியும் காலம் கடத்த முடியாது; பாலத்தீனிய இசுரேலிய பிணக்கினைத் தீர்க்க வேளை வந்துவிட்டது'' எனக்கூறி பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமிட்டார்.

வரலாற்றிலே முதன்முறையாக ஸ்பெயின் தலைநகர் மாட்றீட்டிலே பாலத்தீனிய இசுரேலிய தரப்பு, மேற்காசிய நாடுகள், மேற்குலகம், உருசியா போன்ற உலகத்தரப்பே கலந்துகொண்ட மேற்காசிய மாநாடு நடைபெற்றது. 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதிய இந்நிகழ்ச்சியின் பின்னர் முன்னேற்றங்கள் எதுவுமே தென்படவில்லை. எனினும் இருதரப்புமே நோர்வேயின் துணையுடன அந்நாட்டின் ஒதுக்குப்புறமான பகுதியிலே மிக இரகசியமாக ஏறத்தாழ ஒருவருடம் வரை பேசி இழுபறிகளுக்கிடையில் இணக்கப்பாடுகளுக்கு வந்தனர். இதன்விளைவாகத்தான் 1993ம் ஆண்டு செப்ரம்பர் 13ம் திகதி மாலையில் வெள்ளை மாளிகையில் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் தாய் நிகழ்ச்சியாக வருணிக்கப்பட்ட உடன்பாடு கைச்சாத்திடும் நிகழ்ச்சி பேரளவில் நடந்தேறியது. கடும் வரலாற்றுப் பகைமை, வன்மம் நிரம்பிய இருதரப்புமே சனாதிபதி கிளின்டனின் இருபக்கமாக நின்று முகம்காட்டியபோது உலகமே ஆறுதல் மூச்செறிந்தது.

அப்போது பில்கிளின்டன் வழமையான புன்முறுவலுடன் இலாவகமாகப் பேசும் தன்னாற்றலை வெளிப்படுத்தினார். ''ஏபிரகாமின் புத்திரர்கள். ஐசாக்கினதும் இசுமாயிலினதும் வழித்தோன்றல்கள் இருவரும் இணைந்து இன்றிலிருந்து புதிய பயணம் ஒன்றினை ஆரம்பிக்கின்றார்கள். அமைதிப் பயணமே இனி உங்கள் பயணம். செல்லுங்கள் துணிவுடன்.'' என செல்வழி காட்டினர். இவ்வாறு கிளின்டன்கூறியபோது பாலத்தீனிய மக்களின் அன்றையநாள் வரையான அவலப்பயணம் பலருக்கு நினைவில் வந்தது. கிறித்துவிற்கு முன்னரே இவ்விருதரப்பும் பாலத்தீனிய மண்ணில்ஒன்றாகவாழ்ந்தும்-கி.பி.முதலாம் நூற்றாண்டளவில் உரோமர் இப்பகுதியைக் கைப்பற்றியபோது தொடங்கிய யூதர் வெளியேற்றம் 16ஆம் நூற்றாண்டில் பாலதீனியப் பகுதியை தனது மாகாணமாக்கிய துருக்கிய ஒட்டோமன் சாம்ராச்சியம் முதலாம் உலகப் போரின்பின் வீழ்ச்சியடைந்தபின் தாயகம் நோக்கிய பயணமாகியதும் - இரண்டாம் உலகப் போரின் போது இனப்படுகொலைக்குள்ளான யூதர் மீதான அனுதாபம் அவர்களுக்கென பாலத்தீனிய மண்ணில் இசுரேல் என நாடமைக்க 1948ஆம் ஆண்டுவழிகோலியதும்- அதன் பின் பாலத்தீனிய மக்களின் மண் வன்முறையில் பறிக்கப்பட்டு அவர்கள் வெளியேற்றமும் யூதக் குடியேற்றங்கள் பாலத்தீனிய மண்ணெங்கணும் அமைக்கப்பட்டதும் - பாலத்தீனிய மக்கள் இலட்சக் கணக்கில் ஏதிலிகள் தங்கக வாழ்க்கையை வாழ நேர்ந்ததுமான அவலப்பயணமிது. யூதசியோனிச தேசியவாதம் ஏகாதிபத்திய குடியேற்றவாதப் போக்கினைக்கொண்டதாக மாறியதும் நினைவிற்கு வந்தன. பாதுகாப்பு, பாதுகாப்பென பாலத்தீனியமண் முழுமையாக விழுங்கப்பட்டபோதுதான் 1960களில் பாலத்தீனிய விடுதலை இயக்கங்கள் பிறந்தன. ஆயுதப்போராட்டம் நடத்தியும் அரைஅங்குல நிலத்தைத்தானும் மீட்கமுடியாத சூழலில் தாயகத்திலிருந்தும் பின் அவர்கள் தளமிட்டயோர்தான், லெபனான், ரியுனிசு போன்ற இடங்களிலிருந்தும் விரட்டப்பட்டு விடுதலைப்போராட்ட தலைவர்களே இசுரேலிய உளவமைப்பான மொசாத்தால் கொல்லப்பட்டபின் 1987களில் பாலத்தீனிய மக்கள் ''தாமே தன்னெழுச்சிபெற்று போராடிய இன்றிபாதா'' நிலையும் நினைவிற்கு வந்தன.

எனவேதான் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் ஆயுதப் போராட்டத்தினை நடத்தி தாயகத்தை மீட்கமுடியாத நிலையில் உலக நாடுகள் ஆதரவினை இராசதந்திர முயற்சிகளின்வழி பெறமுயல்வதையே முழுநேர முயற்சியாகக்கொண்டார். 1947ம் ஆண்டு ஐ. நா. விற்குக்கூட அவர் சென்றார். பார்வையாளர் தகுதியை தனது அமைப்பிற்குப் பெற்றார். அப்போது அங்கு அவர் உரையாற்றுகையில் ''எனது ஒரு கையில் ஒலிவ் கிளையுடனும் மறு கையில் விடுதலைப் போராளியின் சுடுகலனுடனும் இங்கு வந்துள்ளேன். எனது கையிலிருக்கும் ஒலிவ் கிளையை கீழே விழுமாறு செய்துவிடாதீர்கள்'' என உலகத்தின் மீதே பொறுப்பைச் சுமத்தினார். இவ்வாறு அன்றுகூறிய அரபாத் வழமையாகத் தான் இடுப்பில் தரித்திருக்கும் பிஸ்டலை கழட்டிவிட்டு வெள்ளை மாளிகையில் தோன்றினார். பின்வருமாறு கூறினார்.

''எனதுமக்கள் இன்றிலிருந்து அவலப்படார், துயர்ப்படார். அமைதியாக வாழ வழிபிறந்துள்ளது'' என்றார். இன்னுமொரு படி மேலே போய் அமைதியின் காவலாக தோற்றம் காட்டினார். இசுரேலிய பிரதம மந்திரி யிட்சாக் றபின். இந்த றபின் தான் இளவயதில்பாலத்தீனிய மண்ணிலிருந்து அம்மக்களை வெளியேற்ற உண்மையான பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர் என்பதும் இசுரேலியருக்கு இவரொரு போரின் கதாநாயகன் என்பதும் 1964-68 இடையில் இவர் இசுரேலிய இராணுவப்படை மேலாளர் என்பதும் 1967ம் ஆண்டு ஆறு நாள் போரில்தான் அரபுநாடுகள் வசமிருந்த மிச்சசொச்சமான பாலத்தீனிய மண்ணும் (ஆறு நாட்களுக்குள் மேற்குக்கரை, காசா, கோலான்குன்று, சினாய்பாலைவனம்) பறிக்கப்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடவேண்டியவை. இப்படிப்பட்ட றபின்கூறினார் ''நான் பாலத்தீனியர்களுக்கு ஒன்று சொல்வேன். நாங்கள் ஒரே மண்ணில் ஒரே நிலத்தில் வாழ நிர்மானிக்கப்பட்டவர்கள்- இங்கே உரத்துத் தெளிவாக சொல்கிறேன் சிந்திய கண்ணீர் போதும்; சிந்திய செந்நீர் போதும் பிறப்பதற்கும் இறப்பதற்கும் அழுவதற்கும் சிரிப்பதற்கும் அன்பிற்கும் வெறுப்பிற்கும் போரிற்கும் அமைதிக்கும் நேரமுண்டு. இப்போது அமைதிக்கான நேரம் வநது விடடது'' என்றார். (பின்னர் றபின் இசுரேலிய யூதமதத் தீவிரவாதி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்) றபினின் ''அமைதிக்கான நேரம'' என்பதன் பொருள் இதுதான். ''காசா-ஜெரிக்கோ முதலில்'' - என்றும் அழைக்கப்படும் இவ்வுடன்பாட்டின்படி பாலத்தீனிய தாயகத்தின் காசா பகுதியும் (இது வளமற்ற ஏதிலிகள் தங்ககங்கள் நிரம்பிய பகுதி) ஜெரிக்கோ (இயற்கை வளமிக்கயோர்தான் நதியாயும் மேற்குக் கரையில் ஒரு நகரம்) நகரமுமே முதலில் சுயாட்சிப் பிராந்தியங்களாக விளங்கும். இங்கிருந்து இசுரேலியப் படை வெளியேறும். தேர்தல் மூலம் தெரிவாகும் பாலத்தீனிய சபைக்கு இப்பகுதிகளின் குடியியல் நிர்வாகம் இசுரேலியரால் கையளிக்கப்படும். கல்வி கலாச்சாரம், சுகாதாரம், சமூகநலன், சுற்றுப்பயணத்துறை, நேரடி வரிவிதிப்பு என்கிற ஐந்து துறைகள் இச்சபையின் ஆளுகைக்குள் வரும். நீர், மின்சாரம், நிதி, போக்குவரத்து, தொலைத் தொடர்பு, வணிகம், ஊடகம் என்பனபற்றி இருதரப்பும் இணைந்த குழு இணைந்து முடிவுகளை எடுக்கும் என்றும் கூறிய உடன்பாடு அமைதிக்கான கால அட்டவணை ஒன்றையும் தயாரித்தது.

1993 டிசம்பர் 13- காசா, ஜெரிக்கோ பகுதிகளில் பாலத்தீனிய சபையின் ஐந்து வருடஇடைக்கால நிர்வாகத் தொடக்கமும், இப்பகுதிகளிலிருந்து இசுரேலிய இராணுவெளியேற்றமும்.

1995 டிசமபர் 13-நிரந்தர உடன்பாட்டிற்கான பேச்சுக்கள்தொடக்கம்.

1998 டிசம்பர் 13-நிரநதர உடன்பாடு நடைமுறைக்கு வரும்.

இக்கால அட்டவணைப்படி சகல பிணக்குகளும் தீர்க்கப்பட்டு இப்போது பாலத்தீனத்தில் முழுமையான அமைதி, அபிவிருத்தி ஆனந்தம் நிலவவேண்டும். ஆனால் நிலவுவதோ பேரழிவும், படுகொலையும். உடன்பாட்டுக்கு முன்பிருந்ததைவிட பன்மடங்கு கூடுதலான வெறுப்பும் பழிவங்கும் மனோபாவமும் கொதிப்பும் கோபமும், பாலத்தீனிய பகுதிகளில் மேலும் இசுரேலிய இராணுவ அத்துமீறல்களும் தொடரும் யூதக்குடியேற்றங்களும். இதுதான் இன்றைய பாலத்தீனிய கதை. உடன்பாடு காணப்பட்ட விடயங்களை குறித்த கால எல்லைக்குள் இசுரேலைக் கொண்டு செயவிக்க அரபாத் படாதபாடு பட வேண்டியிருந்தது. மேலும் மேலும் பேச்சுக்கள், உடன்பாடுகள் என பேச்சுவார்த்தைக்கான பயணங்களிலும் மேசைகளிலும் ஆவணங்களிலும் காலம்கழிந்தது. படிப்படியாக பாலத்தீனிய சுயாட்சிப்பிரதேசத்தினை விரிவாக்க இசுரேல் விரும்பாமை இன்னும் தீர்க்கப்படாத சிக்கல்களான யூதக்குடியேற்றங்களின் எதிர்காலம், ஜெருசலேம் எவருக்கு? வெளிநாடுகளில் வாழும் பல இலட்சம் பாலத்தீனியர் தாயகம் திரும்பல, இசுரேலிய இராணுவ வெளியேற்றம் – இவ்வாறாக சிக்கல்களில் மேலும் சிக்கல்கள். சிக்கெடுக்க முடியாத சிக்கல்கள்.

இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்? சேர்ந்துவாழ விரும்பாத, முடியாத பாலத்தீன மக்களை சுதந்திரமாகவும் செழிப்பாகவும் வளம்மிக்க மண்ணில் வளமாக வாழ்ந்த மக்களை சாவின் விளிம்பிற்குள் தள்ளியவர் யார்?

( 04ம் பக்கம் பார்க்க )

இந்த இனப்பிரச்சினையும் இனபப்பாரும் பல போர்நிறுத்தங்களை, பல சமாதான முயற்சிகளை கண்டுவிட்டன. அவை கசப்பான அனுபவங்களாகவே எமது வரலாற்றில் கடந்துபோயின. இப்பொழுது மீண்டும் ஒரு முயற்சித்தல்.

இத்தகையதொரு புறநிலையில் புலிகள் தரப்பால் முன்னெடுக்கப் படக்கூடிய போர் நடவடிக்கைக்கு முகங்கொடுக்க அரசபடையினரால் இயலாது என்பதை எவராலும் விளங்கிக் கொள்ள இயலும்.

இந்நிலையில்தான் புலிகள் தாமாக முன்வந்து யுத்தநிறுத்தம் செய்ததுடன் சமாதான முன்

மையை மதிப்பீடு செய்யவும் இராணுவம் தவறவில்லை. இராணுவ நடவடிக்கை என்ற விசப்பரீட்சைக்கு மீள ஒருமுறை துணிய சிங்கள அரசினால் முடியவில்லை.

இவ்வாறு, தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் புலிகள் யுத்தநிறுத்தம் செய்தபோதும் சமாதானக் கரங்களை நீட்டிய போதும் சிங்கள அரசாங்கம் போர்

# கசப்பான அனுபவங்களுடன் எதிர்பார்ப்புடனான முயற்சித்தல்.

**- பிரபுத்திரன் -**

கடந்துபோன எல்லா யுத்தநிறுத்தங்களும் சமாதான முயற்சிகளும் மேலெழுந்ததற்கு அவ்வக்காலத்திற்குரிய வரலாற்றுப் புறநிலைகள் இருந்தன. அவ்வாறே சிறிலங்காவிடம் இருந்து வரும் இந்த முயற்சித்தலுக்கும் அரசியல், இராணுவ புறநிலைகள் உண்டு.

யுத்த சமநிலையில் புலிகளின் கை மேலோங்கி விட்டது. மற்றும், போர் நிலைமையில் ஏற்பட்டிருந்த மாற்றம் புலிகளால் வடக்கு கிழக்கு தழுவிய பலபகுதிப் போர்முனைகளை ஒரே சமயத்தில் திறக்கவும் வலுவான தீர்மானகரமான போரை முன்னெடுக்கவும் முடியு



மான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது. வன்னிப் போர்முனையில் புலிகளின் வலிந்த தாக்குதலை கட்டுப்படுத்த ஒருமுகப்படுத்தப் பட்ட இராணுவ வலுவே திணறிய சமயத்தில் இத்தகைய புலிகளின் போர் வலிமையும் நிகழ்ந்த மாற்றமும் படை ஒருமுகப்படுத்தலை சிதறடித்து விட்டன. இதனால் ஒரு தற்காப்புப் போரைத்தானும் நிகழ்த்துவதற்கான வலுவையோ வாய்ப்பையோ கூட அரசபடைகள் இழந்து விட்டிருந்தன. (இதுபற்றி சென்ற இதழில் இதே பத்தியில் விரிவாக எழுதப்பட்டிருந்தது)

இராணுவ நிலைமை இவ்வாறிருக்க இலங்கையில் பாராளுமன்றம், சனாதிபதி என்ற இரு வேறு அரசியல் அதிகார வலுக்களில் கீரியும் பாம்புமாக இருவேறு முரண்பட்ட கட்சிகள் அமர்ந்திருக்கின்றன. பாராளுமன்ற வலுவால் சனாதிபதியை அகற்றாது ஆட்சிக் குதிரையில் சவாரி செய்ய முடியாது என்பது அரசாங்கத்தைக் கைப்பற்றியுள்ளவர்களுக்குத் தெரியும்.

மேலும், இலங்கையின் பொருளாதாரம் மீட்புக்கு வாய்ப்பற்றவாறு அதள பாதாளத்துள் சரிந்து போய்க் கிடக்கிறது. கைப்பற்றிய ஆட்சியை கொண்டு நடத்த முடியாத துர்ப்பாக்கியத்தில் ஐக்கிய முன்னணி தள்ளப்பட்டிருக்கிறது. மார்ச்சில் நடக்கவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கருணைப் பார்வைக்காக அரசாங்கம் ஏங்கி நிற்கிறது.

னெடுப்புக்கான கரங்களையும் நீட்டியுள்ளனர்.

இலங்கையில் அமைதியை விரும்புவோர் சமாதானத்திற்கான இருதரப்பு விட்டுக்கொடுப்புக்களும் போதுமானதாக இல்லை

யென ஆதங்கத்துடன் கருத்து வெளியிடுகின்றனர். விட்டுக்கொடுப்பென்பது எதை என்பதிலல்ல; எத்தகைய புறநிலையில் எதையென்பதில்த்தான் விட்டுக்கொடுப்பென்பதன் பொருளடங்கியுள்ளது. புலிகளின் யுத்த நிறுத்தத்தையும் நீட்டிய சமாதானக் கரத்தையும் இத்தகைய அதன் புறநிலையில் வைத்துத்தான் விளங்கவேண்டும்.

இதனை செப்ரம்பர் 11இன் பின்னாக எழுந்த புதிய சர்வதேசச் சூழலுடன் ஒப்பிட்டு அதன் நிமித்தமான புலிகளின் அணுகுமுறை இதுவென தென்னிலங்கைப் பத்திரிகை இனவாதிகள் 'புத்திஜீவித்தன'த்துடன் வாய்ச் சவடால் விடுகின்றனர். புலிகள் யுத்தநிறுத்தம் செய்வதும் சமாதனக் கரத்தை நீட்டுவதும்; இது முதல்முறையல்லவே.

சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் புலிகள் இதேபோன்று தாமாக முன்வந்து யுத்தநிறுத்தம் செய்ததுடன் சமாதானக் கரத்தையும் நீட்டி நோர்வேயின் சமாதான முயற்சியையும் வரவேற்று நின்றர். அப்பொழுதும் புலிகள் தமது பலவீனத்தால் யுத்தநிறுத்தம் செய்கின்றனர் என தமது 'புத்திஜீவித்தன' வாதத்தை முன்வைக்க இவர்கள் தவறவில்லை.


இராணுவமும் இவ்வாறே அதனை மதிப்பீடு செய்திருந்தது. ஆனையிறவை மீளக் கைப்பற்ற இதுவே தக்கதருணமென தம்பியது. 4 மாதம் நீடிக்கப்பட்ட யுத்தநிறுத்தம் அரசின், தனது பலம் மீதான - அல்லது புலிகளின் பலவீனம் இதுவென்ற அசட்டு நம்பிக்கையின் அகம்பாவப் போக்கினால் பயனேதுமற்று முடிவடைந்தது. யுத்தநிறுத்தம் முடிந்து 5 மணித்தியாலத்திற்குள் முன்னெடுக்கப்பட்ட பெரும் இராணு நடவடிக்கை - தீச்சுவாலை-பாரதூரமான இழப்புக்களை கண்டது மட்டுமல்ல அவமானகரமான தோல்வியையும் அடைந்தது. அப்பொழுது, புலிகள் நீட்டிய சமாதானக்கரம் பலவீனத்தின் பாற்பட்டதல்ல என்பது மாத்திரமல்ல புலிகள் எத்தகைய போர்வலிமையுடன், இருக்கிறார்கள் என்பதையும் அது நிரூபணமாக்கிற்று. அதன் பின் நிலைமையை புரிந்து கொள்ளவும் உருவாகிய புதிய நிலை

நிலைமை தமக்குச் சாதகமாக உள்ள போதெல்லாம் - அல்லது அவ்வாறு அவர்கள் கருதியபோதெல்லாம் அவற்றை மறுதலித்திருக்கின்றன. மேலும் அவமரியாதைக் குட்படுத்தியுமிருக்கின்றன. ஆனால் அரச தரப்படமிருந்தோ மூன்றாம்தரப்பிடமிருந்தோ சமாதானக்கரம் நீட்டப்பட்டபோதெல்லாம் அதனைப் பற்றிக் கொள்ள புலிகள் என்றுமே தவறியதில்லை.

ஆனால் எந்தச் சமாதான முயற்சிகளும் துரதிஸ்டவசமாக கசப்பான அனுபவங்களாகவே தமிழருக்கு கழிந்து போயின. ஏனெனில் அரசின உள்நோக்கம் சமாதானத்தை அடைவதாக அதில் இருக்கவில்லை. அவை தமக்கெழுந்த நெருக்கடிகளிலிருந்து சாதகமான சூழல் வெல்லப்படுவதற்கான கால அவகாசமாகவே பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் எந்தச் சமாதான முயற்சியிலும் தமிழரின் தேசிய ஒருமைப்பாட்டைத் தானும் ஏற்குமளவிற்கு சிங்கள அரசு முன்னேறவில்லை. இம்முறை முயற்சித்தல் எப்படி முடியப் போகிறது.

யுத்தநிறுத்தத்தின் உள்நோக்கம் யுத்தத்திற்காக என்றிருப்பின் யுத்தத் தவிர்ப்பென்பதும் அடிப்படையில் ஒரு யுத்த நடவடிக்கைதான். இன்று அரசுக்குள்ள அரசியல், பொருளாதார இராணுவப் புறநிலையில் அதன் யுத்தத் தவிர்ப்பு யுத்த நடவடிக்கையாக இருந்து விடக்கூடாது என்பது தான தமிழ் மக்களினுடைய ஆதங்கம்.

புலிகளைப் பொறுத்தவரையில் புலிகள் இயக்கம் ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடும் ஒரு விடுதலை அமைப்பு. இந்தப் போரின் நோக்கம இரத்தம் சிந்துவதல்ல; தமிழர்களின நியாயபூர்வமான அரசியல் உரிமையை அடைவதே. இரத்தம் சிந்தாத வழிமுறைக்குரிய சூழல் பிறக்கும் போதெல்லாம் புலிகள் எத்தனை தடவையும் அந்த நாகரிக வழியில் முன்முயற்சி எடுப்பர். அரசினாலோ மூன்றாம் தரப்பினாலோ எடுக்கும் எந்த சமாதானப் பிரயத்தனத்தையும் வரவேற்றும் நிற்பர். அதுவே அவர்களின தேவையும் கடமையுமாகும்.



இன்றும், சமாதானத்தை முன்வைத்து ஆட்சியேறியுள்ள அரசுடன் நோர்வேயின் மத்தியஸ்த்த முயற்சியோடு புலிகள் ஒரு முன் முயற்சியை எடுத்துள்ளனர். இது தமிழர்களின் வரலாற்றில் இரத்தம் சிந்தாத பாதையின் மீண்டும் ஒரு முயற்சித்தல், என்பதை விட இப்போதைக்கு இதற்குவேறு கனதியில்லை. □

(03ம் பக்கத் தொடர்ச்சி)

தமது விதியை தாமே தீர்மானிக்க முடியாமல் இசுரேலியரின் பிடியில் இம்மக்கள் சிக்கித்துவள்வதை ஏன் உலகம் வேடிக்கை பார்க்கின்றது? ஒரு வழியாக இருக்கவேண்டிய பேச்சுவார்த்தை இராசதந்திரம் என்பன ஒரேவழியாக அங்கு மாறியதேன்? பாலத்தீனியப் பெண்கள் அமைப்பின் முன்னணித் தலைவியான சுமயா என்பவர் அண்மையில் வழங்கிய செவ்வியின் சில பகுதிகள் இதோ ''இசுரேல் உண்மையான சமாதானத்தினை விரும்புவதாக இல்லை. இதனால் நாங்களொரு சிக்கலான நிலையிலுள்ளோம். இசுரேலியர் அமைதி முயற்சிகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றனர், 22 விதமான நிலமே எமக்குத் தரப்பட்டுள்ளது. அரபாத் விட்ட பெருந்தவறு இதனை ஏற்றமையே. இந்த 22 விழுக்காட்டிலும் ஒருபகுதியை இசுரேல் தன்னுடன் வைத்துக்கொள்ளவே விரும்புகின்றது.''

மேலும் சுமயா சொல்கிறார் ''34 ஆண்டுகால ஆக்கிரமிப்பின் கொடுமைக்குள் நாங்கள் வாழ்கின்றோம். ஆனால் கடந்த 14 மாதத்தில் இது மேலும் அதிகரித்துள்ளது. கடந்த 4மாதத்தில் 62 பாலத்தீனிய முன்னணி அரசியலாளர்களை இசுரேலியப் படை கொலை செய்துள்ளது. 39 காவல் நிலையங்களைக் குண்டு போட்டு தகர்த்துள்ளது. (பாலத்தீனிய அதிகாரசபையின் சகல கட்டடங்கள், அரபாத்தின் அலுவலகங்கள் என சகலமுமே இப்போது தாக்கப்படுகின்றன. தாம் ஒருகையால் வழங்கியதை இசுரேல் மறுகையால் அழிக்கின்றது) அரபாத் தொடர்ந்து தவறுகள் விடுகிறார். குறிப்பிட்ட சில விடயங்களில் உறுதியான நிலைப்பாட்டினைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக அவர் அமெரிக்காவை நம்பினார். எமது போராட்டத்திற்கு இளம்குருதி தேவை (23/12 தினக்குரல்) இவ்வாறு அவர் செவ்வி நீள்கிறது.

இறுதியாகக் கிடைத்த மூன்று செய்திகளை இணைப்பதன் மூலம் இக்கட்டுரையை முடிவிற்கு கொண்டுவருகிறோம். ஒன்று - பிரித்தானியப் பிரதமர் கூறியது - பாலத்தீனிய மக்களுக்கென தனியான தயாகத்தினை உருவாக்குவதை தவிர மாற்றுவழிகள் இருப்பதாக தென்படவில்லை. இரண்டு - அமைதிக்கான தீர்விற்கு ஓரளவிற்கு சாதகமானவர் எனப்படும் இசுரேலிய வெளிநாட்டமைச்சர் சிமோன் பெரஸ் கூறியது-எவ்வளவுதான் நீதிநியாயங்கள் இருந்தாலும் வன்முறை வழிமுறையை எவரும் கையாள முடியாது அது பயங்கரவாதமே. மூன்றாவது - பாலத்தீனிய சுயாட்சிச் சபைக்கு ஈரானிலிருந்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்கள் ஒரு தொகை அடங்கிய சிறு கப்பலொன்றை இசுரேலியர் நடுக்கடலில் மடக்கிப் பிடித்து அரபாத்திற்கு வந்த ஆயுதங்கள் இவை என ஒரு கண்காட்சியே நடத்தி வருகின்றனர். இவ்வாயுதங்களில் ராக்கி எதிர்ப்பு ஏவுகணைகளும், மோட்டார்கள் என்பனவும உள்ளடங்கும்.

அரபாத் இனிமேல்தான் ஆயுதப் போராட்டத்தினை ஆரம்பிக்கப்போகின்றாரா? O

# மீண்டும் சமாதானப் பேச்சு. கானல் நீரா! கைகூடுமா!

ஐ.தே. முன்னணித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அரசாங்கம் அமைந்துவிட்டது.

சமாதான முயற்சிகளையும் - பொருண்மிய மீட்சியையும் முக்கிய ஆட்சியியல் இலக்காகக் கொண்டு தமது அரசாங்கம் செயற்படும் என பிரதமர் அறிவித்துள்ளார்.

புலிகள் இயக்கம் சார்பில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் பிரகடனப்படுத்திய ஒரு மாதகால போர் நிறுத்தத்தைக் கருத்தில் எடுத்த சிறிலங்காப் பிரதமர் அரசாங்க தரப்பில் இருந்து ஒருமாத மோதல் தவிர்ப்பை அறிவித்தார்.

நத்தார் தினத்துடன் ஆரம்பமான போர்ஓய்வு சிறந்த முறையில் இருதரப்பினராலும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கெதிரான பொருண்மியத் தடைகளை படிப்படியாக அகற்றப்போவதாக வாக்குறுதி அளித்த பிரதமர் முதற்கட்ட நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளார்.

வெளிநாட்டு மத்தியத்துவராக முன்னர் செயற்பட்ட நோர்வே அரசிற்கு மீண்டும் அழைப்பனுப்பிய சிறிலங்கா பிரதமர் நோர்வேயின் பங்களிப்பைக் கோரியுள்ளார். சந்திரிகா அரசாங்கம் ஓரங்கட்டியிருந்த முன்னாள் அனுசரணையாளர் சோல்கெயிம் அவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார். முன்னர் தனியொரு அனுசரணையாளர் என்ற நிலைமாறி இப்போது ஆறு பேர் கொண்ட அனுசரணையாளர் குழுவொன்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போகின்றது.

நோர்வேயின் வெளிவிவகார பிரதி அமைச்சர் திரு கெல் கேசன் தலைமையிலான அனுசரணையாளர் குழுவில் சோல்கெயிமும் ஒருவர்.

புலிகள் இயக்கத்துடன் இதுவரைகாலமும் நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததற்கு ''பலமான அடித்தளம் இன்மையே'' பிரதான காரணம் என பிரதமர் ரணில் தனது கருத்தைக் கூறியுள்ளார். பலமான அடித்தளத்தை அமைக்க தனது அரசாங்கம் மெதுவாகவும் - உறுதியாகவும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறியுள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடாத்தி ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உதவும் வகையில் தான் மூன்று குழுக்களை அமைத்துள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சூழலை உருவாக்கும் பணியில் ஒரு குழுவும், பேச்சுவார்த்தைகளை நேரடியாக நடாத்த ஒரு குழுவும், பேச்சுக்களில் பிணக்குகள் ஏற்பட்டு-முடக்க நிலை எழுந்தால் மாற்றுத் தீர்வுகளை ஆயவு செய்து அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற ஒரு குழுவும் என மூன்று தளங்களில் இவை செயற்படும் என்றார்.

புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் நேரடியாகப் பங்குபெற கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல். பீரிசும், பொருளாதார சீர்திருத்த அமைச்சர் மலிந்த மொறகொடவும், முன்னாள் ராஜதந்திரி ஜயந்த தனபாலாவும் பிரதமரினால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என ஐ.தே. முன்னணி சார்பான சண்டேலீடர் (30. 12. 2001) பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்மக்களுக்கு அவநம்பிக்கையூட்டும் வகையில் புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இடையிடையே சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சியில் காட்டி வரும் ஆரம்ப முயற்சிகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுபவையாக உள்ளன.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனை பூதாகார வடிவமெடுத்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சியில் இருந்து - தென்தமிழீழத்தை ரணகளமாக்கிய ஆர். பிரேமதாசா உட்பட, இலங்கைத் தீவையே இரத்தக்காடாக்கிய சந்திரிகா அம்மையாரது காட்டாட்சிகளையும் - அதன் எதிர் விளைவுகளையும் நேரடியாகப் பார்த்த அனுபவம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு.

மூன்றுவேறு காலகட்டங்களில் சிறிலங்காவின் ஆட்சியாளர்களாக இருந்த இந்த முப்பெரும் சிங்களத் தலைவர்கள்; போர் மூலம் புலிகளை வெல்லமுயன்று - படுதோல்வி கண்ட உண்மை புதிய பிரதமருக்கு நன்கு தெரியும்.

போர்மூலம் புலிகளைவென்று தமிழரின் தேசிய இனப்பிரச்சனையை நசுக்கும் திறன் சிங்கள அரசுக்கு இல்லை என்ற உண்மை இன்று சிங்கள மக்களுக்கும் - சர்வதேச சமூகத்திற்கும் தெரிந்த உண்மையாகிவிட்டது.

போர் புரிய விரும்பினாலும் சிறிலங்காவின் பொருளாதாரம் அதற்கு இடங்கொடுக்க மறுக்கின்ற இன்றைய புறச்சூழலிலேயே ரணில் விக்கிரமசிங்க புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளார்.

சமாதானப்பேச்சு - அரசியல் தீர்வு என கதைத்தாலே பொங்கியெழுந்து இனவெறி கக்கி - போர் முரசு கொட்டுகின்ற பௌத்த மத பீடங்களும் - பிக்குகளும் இப்போது அடக்கி வாசிக்க முயல்கின்றார்கள்.

7 வருடப்போரால் எதையும் சாதிக்க முடியாது போனாலும், தொடர்ந்தும் தமது போர்க் கொள்கைக்கு ஆதரவு கேட்டு-தேர்தலில் தோல்வி கண்ட பொ.ஐ. முன்னணியினர்; புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு புதிர் நிறைந்த மௌனத்தைக் காட்டி வருகின்றனர்.

ஜே.வி.பியினரும் - சிங்கள உறுமயக்காரர்களும் சமாதானத்துக்கு விரோதமாகப்பேசி வருகின்றனர்.

1950 களில் சிங்களமக்களிடம் இனவெறியைத்தட்டி எழுப்பி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின வழியில் அரசியல் பலம்பெற ஜே.வி.பிகாரர்கள் முயல்கின்றார்கள்.

சிங்களதேசத்துப் பத்திரிகைகள் சமாதான சூழலுக்கு ஆதரவாகச் செயற்படவில்லை. 'ஜலண்ட்' நாளிதழ் தனது கட்டுரைகளிலும் - ஆசிரியர் கருத்துரைகளிலும் இனவெறி கக்கி -புலி எதிர்ப்புப்பிரச்சாரம் செய்து சிங்களவர் மத்தியில் பதட்டத்தை உருவாக்க முயல்கின்றது.

இதேவேளை, ஐ.தே. முன்னணியின் ஆதரவுப்பத்திரிகை என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் குடும்பத்தினரை பங்குதாரராகவும் கொண்டதெனச் சொல்லப்படும் 'சண்டேலீடர்' பத்திரிகை (30.12.2001) தனது ஆசிரியர் கருத்துரையில், சிங்களவரை வெருட்டிக்கிலிகொள்ள வைக்கும் நச்சுக்கருத்தொன்றுக்கு, வக்காலத்து வாங்கப்பட்டுள்ளது.

''ஐ.தே. முன்னணி ஆட்சிக்கு வந்து நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட்டால் அதன் பிறகு பொ.ஐ, முன்னணி மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் பிரித்துக் கொடுப்பதற்கு நாடிருக்காது'' என்று சிங்கள உறுமயவின் முன்னாள் தலைவர் எஸ்.எல். குணசேகர கூறிய அர்த்தமற்ற வெறுப்புக்கருத்தை சரியானது என்று ஏற்றுக்கொண்ட சண்டேலீடர் ஆசிரியர் புதிய அரசு அவதானமாகச் செயற்படவேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார்.

இந்த அரசியல் சதுரங்கத்திற்குள் சமாதான முயற்சிகள் ஒரு பகடைக்காயாகி - செத்தழிந்துவிடுமோ! என்ற அச்சமும் தமிழ் மக்களிடம் உண்டு.

சமாதானப் பாதைக்கு குறுக்கே சிங்களப் பேரினவாதிகளும் - சிங்களத் தீவிரவாதிகளும் திரண்டெழும் நிலைவந்தால் அவற்றைத் துணிச்சலாகஎதிர்கொண்டு-சமாதானப் பாதையில் உறுதிகாட்டும் தலைமைப்பண்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உண்டா! என்பது தெளிவாகத் தெரியவில்லை.

''சமாதான முயற்சியில் பாரிய நம்பிக்கை கொள்ளவேண்டாம். படிப்படியாக முன்னோக்கிப் போவோம். மலர்கள் நிறைந்த பாதையல்ல இது. இறுக்கமான-கடினமான பாதை இது. எல்லாத் தடைகளையும் அகற்றுவோம்.'' என மந்திர சுலோகம்போல ஐ.தே. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உரையாற்றியுள்ளார்.

தீர்வு என்ற கட்டத்திற்கு சமாதானப் பேச்சுக்கள் வளர்ந்து செல்லும்போது சிங்கள தேசத்தில் எழ இருக்கும் எதிர்ப்பலைகளை ஊகித்துவிட்டு பிரதமர் இவ்வாறு தனது மனதைத் திறந்து கருத்துக் கூறியுள்ளார். எனினும்,



இதேவேளை, விசேட அதிரடிப்படைக்கு பத்தாயிரம் பேரை திரட்டுவது என்ற முன்னைய அரசாங்கத்தின் திட்டத்திற்கு புதிய அரசாங்கமும் அங்கிகாரம் வழங்கியுள்ளது. இது சமாதானப் பாதையில் ஒரு நெருடலை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, புதிய அரசாங்கம் ஒருவருடத்தைப் பூர்த்திசெய்தவுடன் நடாளுமன்றை கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலை நடாத்தும் அதிகாரம் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு உண்டு. சந்தர்ப்பம் கிடைத்தால் தனது அதிகாரத்தைப் பிரயோகிக்க அவர் தயக்கம் காட்டமாட்டார் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். இந்த ஒரு வருடகாலத்துள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரையே பதவி கவிழ்க்கும் ஏது நிலைகளும் தென்படுகின்றன.

''உறுதிப்பாடும்- விடாமுயற்சியும்- தெளிவான பாதையும்'' அவசியம் என்றும் நம்பிக்கையூட்டியுள்ளார். தனது நம்பிக்கைக்கு ஆதாரமாக பலஸ்தீனப் பிரச்சனையை உதாரணம் காட்டமுயன்றுள்ளார்.

''பத்து வருட காலத்திற்கும் மேலாக - சர்வதேசத்தின் ஆதரவுடன் மத்திய கிழக்கில்' அமைதி முயற்சி நடைபெறுகின்றது. ஆயினும், அது வர - வர மோசமான நிலையை அடைகின்றது. இருந்தாலும் அங்கே அமைதி முயற்சி இருந்தபடியேதான் உள்ளது''. என்று பிரதமர் உதாரணம் காட்டியுள்ளார்.

படைபலம் என்பது அறவே அற்றநிலையில் பலஸ்தீன விடுதலை இயக்கம், பேச்சு - பேச்சு - பேச்சு என விரக்தியுற்ற நிலையில், வேறுவழிகளின்றிப் பேசிக்

( 08ம் பக்கம் பார்க்க )

-- எல்லாளன்

கைஎட்டும் தூரமே கண்ணுக்குத் துலங்காத மைசொட்டும் இரவு. உடலெங்கும் உரிமையோடு கைபோட்டிருக்கும் முட்செடிகள். கொழும்பு ரோட் (மட் -கொழும்பு நெடுஞ்சாலை) அண்மித்துவிட்டதால் காலணிகள் கைக்கு ஏறுகின்றன. ரைபிள் சிலங்குகள் சலசலக்காது இறுக்கிப்பிடிக்கப்படுகின்றன. ஆபத்தை தவிர்க்கும் அளவிற்கு அவசியமான இடைவெளி விட்டு முன்னே செல்பவரின் சிறு அரவத்தைக்கொண்டு திசையறிந்து பின் செல்வதே ஒரு கலை.

பல தடவை பதுங்கித்தாக்குதல் செய்யப்பட்டதே அதன் காரணம். அதிலே இரண்டாவது தாக்குதல் 1992ம்ஆண்டு இடம்பெற்றது. அதிலே ஜீவன் களத்தளபதி.

இதற்குமுன்பு நிகழ்ந்த தாக்குதலில் கொல்லப்பட்ட எதிரிகளின் நினைவாக அமைக்கப்பட்ட சிறிய நினைவுத் தூபியை நிலையெடுத்த இடத்தில் இருந்தே பார்க்கக் கூடியதாக இருந்தது. எதிரி அதிலே காப்புநிலையெடுத்து எம்மைத் தாக்கினாலே தவிர, அதைச்சேதப்படுத்த வேண்டாம் என்று இறுதி முதற்தொகுப்புரையில்

கேட்டு வந்ததையும் அறியாத பலர் மூக்கிலே விரல் வைத்தார்கள். நடையுடைபாவனைகளில் கூட ஜீவன் எளிமையானவன். போராளிகளுடன் சேர்ந்து பங்கர் வெட்டிக்கொண்டிருந்த ஜீவன் சற்றுக்களையாற, சராசரிப் போராளியின் உடையில் தனது தளபதி இருப்பார் என்பதைச் சற்றும் எதிர்பாராத ஒரு புதிய போராளி தொடர்ந்து வேலை செய்யும்படி ஜீவனை ஏவியதும் அடுத்த தேனீர் இடைவெளி வரை ஜீவன் மௌனமாக பங்கர் வெட்டியதும் மங்கிப்போக முடியாத மனப்பதிவுகள்

அடங்கலான எமது முகாம்கள் பல குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டன. வாகரைப் பிரதான வீதியோரமாக (திருமலை வீதி) மாவீரர் துயிலும் இல்லம்நிறுவப்பட்டது.

அங்கே நிகழ்ந்த போர்ச்சாதனை பற்றி அக்காலத்தில் மாவட்ட அறிக்கைப பிரிவின் மேலாளராகவிருந்த மேஜர் லோகசுந்தரம் (வீரச்சாவு 05. 03. 1999, மாவடி முன்மாரிப்பகுதியில் விசேட அதிரடிப்படையுடனான மோதலில்) அவர்கள் கூறியது: ''அந்த அறிக்கைகளை ஒப்பிடுவது ஒரு புதிய அனுபவம். 20 மாத காலத்தினுள் வாகரைப் பிரதேச விசாலகன் படையணி சந்திவெளி, சித்தாண்டிப் பகுதிகளிலே நிகழ்ந்த நான்கு பெரும் தாக்குதல்களிலும். மாவடி முன்மாரிப் பிரதேசத்திலே நிகழ்ந்த நடுத்தர அளவிலான சில தாக்குதல்களிலும் கலந்து கொண்டது போக தமது பகுதியில் மட்டும் தனியாகச் செய்த நடுத்தர மற்றும சிறிய தாக்குதல்களில் 340ற்கும் மேற்பட்ட படைக்கலன்களை

# ஜீவனுள்ள நினைவுகள்

தென்ஈழக் காடுகளிலே இந்தக் கலைதான் அவசியமான அரிச்சுவடி. கத்திவெட்டுப்போல் ஒரு நகர்வு... கைவீசும் தென்றல் போல் ஒரு நகர்வு... இப்படி புத்தியையும் பலத்தையும் எடைபோட்டு நடந்ததாலேயே அங்கு போராட்டம் தாக்குப்பிடித்தது, தளிர்கொண்டது. கத்தியையும் புத்தியையும் இடம் மாறிவைத்தவர்களைக் காலம் மட்டுமல்ல காடுகூடக் கைகழுவி விடும்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக கொழும்பு ரோட்டிற்குக் குறுக்காக நடந்த பெரும்பாலான நகர்வுகளை ஜீவன்தான் வழிநடத்தியிருக்கிறான். தவழ்ந்து திரிந்து வேவு பார்த்ததும், தாக்குதல் செய்து தலை நிமிர்ந்ததும், தவறு செய்து தண்டனை பெற்றதும் உயிரைப் பணயம் வைத்து உறுதியை நிலை நாட்டியதும் எல்லாமே இந்தக் கொழும்பு ரோட்டில்தான். அதன் இருமருங்கிலும் நிற்கும் மரங்கள் வயல்வரம்புகள், மின்கோபுரங்கள் மண்மேடுகள் என்று எல்லாமே ஜீவனின் மனதுள் அடக்கம்.

அணியின் நகர்வு தடைப்படுகின்றது. பாதை தவறியது தெரிய வருகிறது. பெரியதொரு காவு அணியையும் அதற்கேற்ற சண்டை அணியையும் கொண்ட அந்த நீண்ட மனிதக்கோடு மீண்டும்

எமக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. தாக்குதல்ஆரம்பித்தது.

எதிரியின் கவச வண்டியை நோக்கி RPG கணையொன்று சீறிச்சென்று வெடிக்க எங்கும் புகைமயம். பவல் உடைந்து விட்டதா? என்ற கூச்சலும் இயந்திர உறுமலும் வேட்டொலியுமாக சிறு குழப்பம் நிலவினாலும் ஆங்காங்கே தென்பட்ட எதிரிகள் சுட்டு வீழ்த்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

வன்னியிலே நிகழ்ந்த பல மறிப்புச்சமர்களிலே இறுக்கமானவை எனக்கருதப்பட்ட இடங்களிலும் ஓயாத அலைகள்-2 நடவடிக்கையிலும் முக்கிய பங்குகளை வகித்து, பின் மட்-அம்பாறை மாவட்டத்தின் இணைத்தளபதியாக பொறுப்பேற்ற பின் - ஏறத்தாள பதினைந்தாண்டு கால வெடிப்புகையையும் சமர்ப்புழுதியையும் சுவாசித்ததால்


மட்டு - அம்பாறை துணைத்தளபதி

## லெப். கேணல் ஜீவன் / எழிலவன்

பிள்ளையான் சந்திரமோகன்
சந்திவெளி, மட்டு.

பிறப்பு 11-09-69

வீரச்சாவு 06-10-01



புகை விலகியபோது பவலின் மிகச் சமீபத்தில் ஜீவன் T55-2 உடன் நிற்பதையும் அவனின் தலையின் மேலாக 50 கலிபரால் சிவப்பாகத் துப்பியபடி பவல் பின் வாங்கி ஓடுவதையும் காணக்கூடியதாக இருந்தது. எந்தச் சமரின் போதும் இறுக்கமான பகுதிக்கே ஜீவன் அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அந்தப்பகுதியிலும் மிக இறுக்கமான இடம் நோக்கியே ஜீவன் ஈர்க்கப்பட்டதற்கு அவனது போரார்வமும் மாசற்ற வீரமுமே காரணம். எங்கும் செல்வோம் என்று எம் படைகள் எழுந்து

முப்பதாவது வயதில் முதற்தடவையாக ஈழைநோயால் பாதிக்கப்பட்டபின் நிகழ்கிறது இச்சம்பவம். இந்த எளிமை கலந்த அர்ப்பண உழைப்புக்களாலேயே பெருவெற்றிகள் சாத்தியமாகின என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

87இன் ஆரம்பத்தில் இணைந்து கொண்ட ஜீவன் 90 இன் பிற்பகுதியிலே ஒரு தனிச்சண்டை அணியின் தலைமையாளனாக வளர்ந்திருந்தான். தானே வேவு பார்த்து, திட்டமிட்டு, களத்தில் வழிநடத்துவதையே அவன் எப்போதும் விரும்பினான். வெற்றியும் அவனையே விரும்பியது.

எதிரியின் மீது தாக்குதல். ஆயுதம் அபகரிப்பு என்ற செய்தி கிடைக்கும் போதெல்லாம், அத்தாக்குதல்களின் தன்மைகளை ஒப்பிட்டு இது ஜீவனுடைய பாணியில் அல்லவா அமைந்திருக்கின்றது என்று பேசுகின்ற அளவிற்கு சிறுதாக்குதல்களில் தனிமுத்திரை பதித்திருந்தான் ஜீவன். இது எந்த வீரனுக்கும் இலகுவில் கிடைத்துவிடாத மிகவுயர்ந்த பேறு.

கைப்பற்றியிருக்கிறது. இப்படியொரு விடயத்தை இதற்கு முன் நான் கேள்விப்பட்டதில்லை.''

சாதனைகள் பொதிந்த ஜீவனின் போரியல் வாழ்வில் சோதனைகளுக்கும் குறைவில்லை. குடும்பிமலைப்பகுதியில் கொமாண்டோக்களுக்கு எதிரான தாக்குதலிலும், பூநகரித் தவளைச் சமரிலும் பின்பு கூமாச்சோலை முகாம் தாக்குதலிலும் உடலின் எடையில் ஈயமும் பங்கேற்கும் அளவிற்கு செம்மையாகக் காயப்பட்டிருந்தான்.

''ஜீவன் உண்ட குப்பியையும் தகட்டையும் வாங்கிப்போட்டு தண்டித்து சமைக்கவிடும்படி சிறப்புத் தளபதி சொல்லியிருக்கிறார்.''

''நாங்கள் சுமந்து திரியும் ரவைகளில் எந்தெந்த ரவை எந்தெந்தச் சிப்பாயின் உடலுக்குரியதோ தெரியவில்லை. இதேபோல எனக்குரிய ரவையையும் ஒரு சிப்பாய் இப்போது சுமந்து திரிவான். அது எப்போது புறப்படும் என்பது எவருக்கும் தெரியாது.'' சண்டைகளின் முன்னான நகைச்சுவைப் பொழுதுகளில் சிரித்தபடி ஜீவன் சொல்வது வழக்கம். அன்று, கொழும்பு ரோட்டின் மையிருளிலே ஈழயுத்தத்தின் இன்னுமொரு அத்தியாயம் முடிய இருந்த சூழ்நிலையில், பதுங்கிக் கிடந்த சிப்பாய் ஒருவனின் ஆரம்ப ரவையாக அது புறப்படும் என்பதையும் எவரும் அறிந்திருக்கவில்லை.

நகர ஆரம்பித்தது. இப்போது அதன் முதல் ஆளாக ஜீவன் நடந்துகொண்டிருக்கிறான்.

இது ஜீவனின் வழமையான பாணி என்பதால் ஒரு தளபதியை முதல் ஆளாகவிட்டு பின்னே செல்லும்போது உண்டாகும் சங்கடம் பலருக்கு ஏற்படுவதில்லை. ஆபத்தை நாடிச்செல்லும் ஜீவனின் இயல்பிற்கு சிங்கபுர சம்பவம் ஒரு சிறந்த உதாரணம்.

சிங்கபுர விடுதிப்பகுதி சிங்களச் சிப்பாய்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவே இருந்து வந்திருக்கிறது. ஒரே இடத்தில்

நடந்ததும் எதிலும் வெல்வோம் என்று சூழ்கொட்டி நிமிர்ந்ததும் ஜீவன்களாலேயே அன்றி வேறு வழிகளில் அல்ல.

ஜீவனின் வாழ்க்கைத்தடத்தில் பயத்திற்கு மட்டுமல்லாது பகட்டிற்கும் இடமிருக்கவில்லை. தலைமைத்துவப் பாடநெறியொன்றில் எல்லோரையும் விட அதிக புள்ளிகளை ஜீவன் பெற்றபோது. ஆர்ப்பாட்டம் இன்றி தனிமையிலிருந்து ஜீவன் கற்றதையும் தலைவரின் பேச்சடங்கிய ஒலி நாடாக்களை பரபரப்பின்றிக்

மூன்றாம் ஈழயுத்த ஆரம்பத்திற்கும் 97இன் ஆரம்பத்திற்கும் இடையேயான காலத்தில் ஜீவன் வாகரைப் பிரதேச கட்டளை அதிகாரியாக இருந்த போதே பலசிறு தாக்குதல்களின் மூலம் கிடைக்கக்கூடிய பெரிய அனுகூலங்கள் அவனால் நிரூபிக்கப்பட்டன. கதிரவெளி வரை பரவியிருந்த எதிரி முகாம்கள் ஐந்து காயான்கேணிப் பகுதியையும் கடந்து பின்வாங்கப்பட்டன. மக்களின் கல்வி பண்பாட்டு முறைகள் சீர்பெற்றன. மருத்துவமனை

இதே கொழும்பு ரோட்டிலேயே, போராளிகளின் சுமைகருதி, தவிர்க்கவேண்டிய பாதையொன்றினூடாக வழி நடத்தியதால் ஏற்பட்ட இழப்பிற்கான தண்டனை அறிவித்தலை தனது உணர்வுகளைச் சிரமப்பட்டு அடக்கியபடி இன்னுமொரு தளபதி ஜீவனிடம் கூறியபோது மிக அமைதியாகப் பதில் வந்தது ''சரி நிறைவேற்றுங்கள்''

அதைத் தொடர்ந்து ஒரு ஆரம்பப் போராளியைப்போல புளுகுணாவை முகாம் தகர்ப்பிற்கான தடையுடைப்புப் பயிற்சி பெறுகிறான் ஜீவன்.

→

தொட்டாற் சுருங்கி முட்கள்
முழங்காலிலும் முழங்கையிலும்
புண்களை ஏற்படுத்துகின்றன.

தன்னைத் தோள்பிடித்து
தூக்கி நிறுத்திய தளபதி,
அரவணைத்து ஆறுதல் தந்த
தோழன். முன்நடந்து வீரம்காட்டி
விழுப்புண் சுமந்த பெருமகன் -
மண்தோய்ந்த காயத்துடன்
பயிற்சி பெறுவதைக் காண
பயிற்சிப் பொறுப்பாளனின்
மனம் விம்முகின்றது.

''ஜீவண்ணன் ...நீங்கள்
எழுந்துபோய் சற்று ஓய்வு
எடுக்கலாம்''

புலிக்குறோளில்
போய்க்கொண்டிருந்த
ஜீவனிடமிருந்து நிமிர்ந்து
பார்க்காமலே பதில் வருகிறது.

''எல்லோருக்கும் பொதுவான
விதிகளே எனக்கும் பொருந்தும்''

நிற்கிறான் ஜீவன். ஆபத்தை
நோக்கி முதல் ஆளாகச் சென்று
அதன் நடுவில் நின்று
நம்பிக்கை தருவதும் கடைசி
ஆளாகவே அவ்விடத்தை
விட்டு அகலுவதும் போராளிகள்
ஜீவன் மேல் பற்றுவைத்ததற்கான
பிரதான காரணங்கள். வீரமுள்ள
எவராலும் ஜீவனை வெறுக்க
முடியாது.

''நாங்கள் சுமந்து திரியும்
ரவைகளில் எந்தெந்த ரவை
எந்தெந்தச் சிப்பாயின்
உடலுக்குரியதோ தெரியவில்லை.
இதே போல எனக்குரிய
ரவையையும் ஒரு சிப்பாய்
இப்போது சுமந்து திரிவான்.
அது எப்போது புறப்படும் என்பது
எவருக்கும் தெரியாது..''
சண்டைகளின் முன்னான
நகைச்சுவைப் பொழுதுகளில்
சிரித்தபடி ஜீவன் சொல்வது
வழக்கம். அன்று, கொழும்பு
ரோட்டின் மையிருளிலே

ஜீவனின் இரத்தம் தோய்ந்த கொழும்புச் சாலையில் இருக்கும் எதிரிச் சுவடுகள் என்றோ ஒரு நாள் துடைத்தழிக்கப்படும். அந்த உன்னத சுதந்திர திருநாளின் போது தாயகப் பெருஞ்சாலைகள் கருத்தாரிட்டு செவ்வனே மெழுகப்படும். ஆனால் ஜீவனின் உணர்வுசுமந்து நிற்கும் ஒவ்வொரு தோழனுக்கும் என்றுமே அது ஒரு செஞ்சாலை.

இறுக்கமான முகத்துடன்
தொடர்ந்து நகரும் ஜீவனைப்
பார்க்க பயிற்சிப்
பொறுப்பாசிரியனின்
உதடுகள் துடித்து விழிகள் பொங்க
குரல் தளம்பாமல் சமாளித்தபடி
கூறுகிறான்.

''பயிற்சிப்புண் அதிகமாகி
விட்ட போராளிகளுக்கு நாங்கள்
பயிற்சிதருவதில்லை. இங்கு நானே
பொறுப்பாளன். இது என்னுடைய
உத்தரவு. நீங்கள் எழும்பலாம்.''

இதுவரை தங்கள்
உணர்வுகளை மரக்கவைத்து
ஜீவனுடன் நகர்ந்து
கொண்டிருந்த அத்தனை
போராளிகளும் நன்றிப்
பெருக்கோடும் நிம்மதிப்
பெருமூச்சோடும் பயிற்சிப்
பொறுப்பாசிரியனை நிமிர்ந்து
பார்க்கின்றார்கள். ஒவ்வொரு
சோடிக் கண்களிலும் ஒவ்வொரு
சோடிக் கண்ணீர் துளிகள்.

ஜீவனுடைய எளிமையையும்
அர்ப்பணிப்பையும் போலவே
குறும்புகளையும் குறைவான
பக்கங்களையும்கூட தலைவர்
அறிந்திருந்தார். இருப்பினும்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்
என்பது போல, பலம் பலத்திற்கு
மரியாதை செய்யும் என்பது போல
வீரம் வீரத்தால் ஈர்க்கப்படுவதும்
தவிர்க்க முடியாதது என்பதை
ஜீவனின் சாவிற்குப் பின்னான
தலைவரின் உணர்வு
வெளிப்பாடுகள் திரைவிலக்கித்
தெரியவைத்தன - தெளியவைத்தன.
சராசரிக்கும் மேலான ஜீவனின்
போரியல் பண்புகளை தலைவர்
அவதானித்தே வைத்திருக்கிறார்
என்பதைப் புரியவைத்தன.

ரோட்டிலே ஜீவன்
கம்பீரமாகக் கால்பாவிநிற்க
நிழல்போலக் கடந்து
செல்கிறார்கள் போராளிகள்.
அந்த இருட்டிலும் ஆட்களை
அடையாளம் கண்டு காதோடு
பாரம் விசாரித்து, தூரம்
சொல்லி, தோள்தட்டி துரிதப்படுத்தி

ஈழயுத்தத்தின் இன்னுமொரு
அத்தியாயம் முடிய இருந்த
சூழ்நிலையில், பதுங்கிக் கிடந்த
சிப்பாய் ஒருவனின் ஆரம்ப
ரவையாக அது புறப்படும்
என்பதையும் எவரும்
அறிந்திருக்கவில்லை.

ஜீவனின் நினைவுகளை
மீட்கும் போது, தனக்குக்
கீழுள்ள படைத்தலைவர்களின்
உணவுத்தட்டுக்களைக் கூட
கழுவிவைத்து ஒழுக்கம் பழக்கும்
எளிமையா, அல்லது முன்
செல்லும் போது முதல்வனாகவும்
பின் வலிக்கும் போது இறுதி
ஆளாகவும் வரும் தலைமைத்துவமா,
எது மேலோங்கி நிற்கிறது என்று
அலசினால் அவையிரண்டையும்
விட அவனின் களவீரமே எல்லோர்
மனதிலும் ஆழப்பதிந்து கிடக்கிறது.
பிறந்த போது குடிசையில்
பிறந்த ஜீவன் இறந்தபோது
ஈழத்தின் இதய சிம்மாசனத்தில்
வீற்றிருந்ததற்கும் அவனது
ஏழ்மையற்ற கம்பீரமனமே காரணம்.

பிறப்பினால் எவருக்கும்
பெருமை வருவதாக நாம்
நம்புவதில்லை. ஜீவன் தன்
நட்பினால் தாய் மண்ணின்
தலையைப் பலமுறை

- இராசமைந்தன் -

நிமிரவைத்திருக்கிறான். அவன்
இழப்பினால் தாய் மண்ணே
சோகம் ததும்பும் பெருமையுடன்
ஒரு கணம் தலைகுனிந்து நின்றது.

ஜீவனின் இரத்தம் தோய்ந்த
கொழும்புச் சாலையில் இருக்கும்
எதிரிச்சுவடுகள் என்றோ ஒரு
நாள் துடைத்தழிக்கப்படும். அந்த
உன்னத சுதந்திர திருநாளின்
போது தாயகப் பெருஞ்சாலைகள்
கருத்தாரிட்டு செவ்வனே
மெழுகப்படும். ஆனால் ஜீவனின்
உணர்வு சுமந்து நிற்கும்
ஒவ்வொரு தோழனுக்கும் என்றுமே
அது ஒரு செஞ்சாலை. ☆

# அஜீயக்கடுதாசி

''காலையில 10 மணிவரைக்கும் நான் கடையில இருந்தா தம்பிக்கு சந்தோசம்''
ஏனெண்டா கனக்க வேல வருமெண்டுதான்.

முகத்தில் கால ரேகையுடன் சோகரேகையும் படர தொடர்ந்த ஜெயராமு அம்மா.

''அண்டைக்கும் அப்படித்தான் கடையில இருந்தனான் தம்பி கேட்டவன் இண்டைக்கு இறைச்சி வேண்டி காச்சவேணுமெண்டு.
அப்ப பையோட வந்து நான் கடையில இருக்க......
திடீரெண்டுதான் ஒரு சத்தமும் கேக்கேல்ல
தம்பி கால மடக்கிக்கொண்டு சைக்கில உரஞ்சிக் கொண்டிருந்தவன்;
மளமளவெண்டு அடிச்சு விட்டான் கிபிர்.
என்னை தூக்கி வீசிட்டுது.
தம்பி இருந்தபடி பின்னுக்கு சாஞ்சு கண்ண மூடுறான்.
அவன்ர வயித்த ஒரு இரும்புத் துண்டேதோ கிழிச்சிட்டு போயிட்டுது.
நான் அப்படியே மயங்கிற்றன்
பிறகு நடந்ததொண்டுமே எனக்கு தெரியாது.''

15.09.1999, காலை.

வழமையான கலகலப்புடன் மந்துவில் சந்தி, அதன் சந்தை நடக்கவிருக்கும் அனர்த்தம் அறியா அந்தக் குடும்பம் வாழ்க்கைப்படகோட்டத்தில் ஆடிஓடிக் கொண்டிருந்தன. ஜெயராமு அம்மாவும் மகன் சந்திரகுமாரும் அவர்களின் பிழைப்பு மையத்தில். அது ஒரு சைக்கிள் திருத்தும் கடைதான். மகன் சந்திரகுமார் வயதுக்கு மிஞ்சிய வளர்ச்சி. எவருமே சொல்லமாட்டார்கள் வயது பத்தொன்பதென்று. திருமணப் பந்தத்தில் இணைந்து, ஊறாத மூன்றே மூன்று மாதந்தான். இரண்டு சகோதரிகள் வாழ்வமைத்துப்போக குடும்பத்தில் உலையேற்றும் உழைப்பாளி இவனே. அழகான மனைவி, அன்பான அம்மா, அப்பா, உறவுகள் என ஒரு கிளை இலைகளான குடும்பம்.

ஆசையாய் இறைச்சி உண்ண ஆசைப்பட்டபிள்ளையும் ஆக்கிக் கொடுத்துவிடத் துடித்த தாயும், இன்னும் இன்னும் இப்படியான உணர்வுகளுடனும் உறவுகளுடனும் கலகலத்த கடையில், அந்தச் சந்தியில்...

வென்றுவிடுவோம் கொன்று விடுவோம் எனப் புறப்பட்ட ஜெயசிக்குறுவின் புத்திரன் 'ரணகோச - 5.' யாரோ திட்டமிட எவரோ வழி நடத்த அன்றும் ஒரு பெருமெடுப்புப் படைநகர்வு. சுவாலை கக்கும் பீரங்கி வாய்களுடனும் நெருப்பள்ளிக்கொட்டும் வான்படையுடனும் ஸ்ரீலங்காக் குமாரர்களின் வருகை, அதுவரை விரித்து வைத்திருந்த புலிகளின் வியூகத்தில் அத்தனையும் வீழ்ச்சி கண்டன. பல படைச் சிப்பாய்களின் இறந்த உடல்களையும் ஆயிரம் வரையில் காயப்பட்ட சக சிப்பாய்களையுமே காணநேர்ந்த அவலம் படைத்தலைமைக்கு. இதனையே தங்களால் உருவாக்க முடிந்தது என்ற அவமானம் அவர்களுக்கு. தங்களையும் தமது மக்களையும் அமைதிப்படுத்த அவர்களுக்கு எப்போதும் போலவே இப்போதும் உயிர்ப்பலிகள் வேண்டும். அவை தமிழர்களுடைய உயிர்கள, கடற்படை சந்தித்த தோல்விக்கு பலியிட்ட நாகர்கோவில் பள்ளிமாணவர்கள், கிளிநொச்சிகள முனைத் தோல்விக்கு பலியிட்ட சுதந்திரபுரம் - உடையார்கட்டு மக்கள், ஜெயசிக்குறுவின் இழப்பிற்கு வவுனிக்குள தேவாலய மக்கள், மடுவைவிட்டு தாங்கள் பின்வாங்க நேர்ந்த அவலத்திற்கு மடுமாதா விடம் மண்டியிட்ட மக்கள், இப்படி ரணகோச-5க்கு மந்துவில் சந்தையும் மாறியதில் வியப்பில்லை.

திடீரென வானில் தோன்றிய இரு கிபிர் விமானங்கள் திட்டமிட்டு தெரிவுசெய்த இலக்கின்மீது, தாம் காவிவந்த நான்கு உயிருருவும் பிண்டங்களை உதிர்த்துவிட்டு உயர்ந்தன. உதிர்த்துவிடப்பட்டவை கிபிரின் வேகத்துடனேயே தரையில் பாய்ந்து தம்மை தகர்த்துக்கொண்டன. காதைப்பிளக்கவைக்கும் திடீர் ஒலி மக்களை திகைக்க வைக்குமுன்னமே சிதறிய இரும்புகள் தம்பணி முடித்து ஓய்வுகண்டு விட்டிருந்தன.

சைக்கிள் கடையில் இருந்த சந்திரகுமாரின் வயிற்றையும் பதம் பார்த்த அந்த உருவேறிய உலோகம் ஈரற்குலையறுத்து உயிர்குடித்து சென்றிருந்தது. பெற்றதாய் காணக்கூடாத காட்சியை காட்டி முடித்த குண்டு அதிர்வுகள் தாயையும் விட்டுவைக்கவில்லை. கடைமேலிருந்த மரங்கள் முறிந்து வீழ்ந்த சிதிலங்களுள் அகப்பட்டஜெயராமு அம்மாவின் வலதுகையும் சிதிலப்பட்டுப் போனது. நான்கு இரும்புப் பிண்டங்களும் நாற்பது பேரைக் காயப்படுத்தியும், இருபத்தியிரண்டு உயிர்களைந்த உடல்களையும், காலறுந்து, தலையறுந்து தொங்கிய ஆடுகளையும் பெரும் புயலில் சிக்கி உருக்குலைந்த மரங்களையும் பிய்த்தெறியப்பட்ட பச்சை இலைகளையும் கரும்புகை புழுதிப்படலத்தையும் விளைவாக்கின.

இடி விழுந்தது போலாயிற்று ஜெயராமு அம்மாவின் குடும்பத்தில்.

''மூண்டு நாளா எனக்கு நடந்தது ஒண்டுந் தெரியாது. நாலாம் நாள்தான் தெரியும் என்ர மனிசனும் செத்துப்போனார் எண்டு,
பக்கத்து கடையில ரேடியோ திருத்திக்கொண்டிருந்தவராம்,
என்ர பிள்ளையும் செத்திட்டுது. மனிசனும் செத்திட்டுது.
எனக்கு கை முறிஞ்சிட்டுது''

ஜெயராமு அம்மா கட்டுமீறி ஓவென்று கத்தத் தொடங்கினார்.

''நான் இப்ப ஒரு ஊனப்பட்ட விதவையாப்போனன்.''

மருமகளாய் வீட்டுக்கு விளக்கேற்றவந்த அந்த சின்னவளை புதுமணப் பெண்ணின் நாணம் மாற முன்னர் விதவையாக்கிவிட்டபடி, வீட்டுக்கு விளக்கேற்றிய ஜீவன்கள் இரண்டின் உயிர்களையும் பறித்தபடி மந்துவிலில் அந்தக் கணப்பொழுது எத்தனையோ மனிதர்களின் வாழ்வில் அவலங்களை திணித்துப்போனது. ☆

- மிகுதன் -

தினக்குரல் நாளிதழ் (25. 12. 2001) தனது வாசகர்களுக்காக வரைந்த ஒரு கேலிச்சித்திரம் சிறிலங்காவின் தற்போதைய பொருளாதார நிலையை எள்ளலுடன் சுட்டிக்காட்டியுள்ளது.

வாகனத்தில் இருந்து இறங்கிச் செல்லும் ஒரு கனவானை நோக்கி பத்து ரூபா தந்துவிட்டுப் போகும்படி ஒரு பிச்சைக்காரன் ஏகவசனத்தில் கேட்க; மரியாதையாகப் பிச்சை கேட்கவில்லை என கனவான் பொரும; ''இந்த நாட்டில் ஒவ்வொருத்தருக்கும் தலா 75 ஆயிரம் கடன் இருக்காம, கடன்காரர்களுக்கு என்னடா மரியாதை'' என பிச்சைக்காரன் பதிலளிக்கிறான்.

விலக்கில்லாமல், அனைத்துமே நட்டத்தில் இயங்கி வருகின்றன.

கோடிகோடியாகச் சம்பாதிக்க வேண்டிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடந்த வருட நட்டம் 2400 கோடி ரூபா.

இலங்கை மின்சாரசபை 1700 கோடி ரூபா நட்டமடைந்துள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம், தபால் திணைக்களம, தண்ணீர் வழங்கல்சபை என்பவற்றின் இழப்புத் தொகை 1000 கோடி ரூபா.

வீழ்ச்சியைச் சந்தித்துள்ள சிறிலங்காப் பொருளாதாரத்தை வைத்துக்கொண்டு பொருட்களின் விலை அதிகரிப்பையும் - அதனால் எழும் வாழ்க்கைச் செலவு உயர்ச்சியையும் கட்டுப்படுத்த புதிய அரசாங்கத்தால் முடியாது.

ஏற்கனவே மாவினதும் - அரிசியினதும் விலைகள் சிறிலங்காவில் அதிகரித்து விட்டன. அரிசியின் விலை 35 ரூபா வரை, சில இடங்களில் அதற்கும் கூட, அதிகரித்து விட்டது. அத்துடன் பாலமா, தொலைபேசிக் கட்டணம, பேருந்து - புகையிரதக் கட்டணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுகளையும் தடுக்க முடியாத நிலையில் புதிய அரசாங்கம் உள்ளது.

# பொருண்மிய இருளுக்குள் சிறீலங்காப் பொருளாதாரம்.

புதிய அரசாங்கத்தின் நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள கே. என். சொக்சி அவர்கள் சிறிலங்காவின் தேசியக்கடன் ஒரு இலட்சத்து நாற்பதினாயிரம் கோடி ரூபாவாக உள்ளது என்ற உண்மையைக் கூறியுள்ளார். தலைக்கு 75 ஆயிரம் ரூபா கடனுடன் ஒவ்வொரு சிறிலங்காப் பிரசையும் உள்ளனர் என்ற அவரின் கணக்கிற்கு வரையப்பட்ட கேலிச் சித்திரமே அதுவாகும்.

ஜே. வி. பியினரின் கிளர்ச்சியில் சிக்குண்டு சிங்களதேசம் திண்டாடிய 1971 - 1972 மற்றும் 1988 - 89 காலப்பகுதிகள், சிறிலங்காப் பொருளாதாரத்தில், மோசமான ஆண்டுகள் எனப் பதிவாகியுள்ளன.

இவற்றைப் பின்தள்ளிவிட்டு மிகமிக மோசமான ஆண்டுப் பொருளாதாரமாக 2001 இடம் பிடித்து விட்டது. சந்திரிகா அம்மையாரது 7 வருட ஆட்சியின் ஒட்டுமொத்த விளைவு அது.

கடந்த 54 வருட ஆட்சி வரலாற்றில் சிறிலங்கா அரசு ஒரு பொருண்மிய வங்குரோத்து நிலையை இப்போதுதான் சந்தித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறுவதுபோல ''பொருளாதாரத்தைச் சரியான பாதையில் ஓட்ட ஒரு அசாதாரண முயற்சி அவசியம் தேவை.'' இந்த அசாதாரண முயற்சி சரியாக முயன்று பார்க்கப்படவில்லையெனில் சிறிலங்காவை பொருண்மியப்படுகுழிக்குள் தள்ளும் ஆண்டாக 2002 அமைந்துவிடும் அபாயம் புதிய அரசாங்கத்தால் உணரப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் தீவிர போர்க்கொள்கையும் - திறமையற்ற ஆட்சியும்தான் வரலாறு காணாத இந்தப் பொருளாதார முடக்கத்திற்குப் பிரதான காரணம் என புதிய அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

நாட்டிற்கு தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கவேண்டிய அரச நிறுவனங்களில் விதி

இந்தப் பொருண்மிய மந்தநிலைக்குக் கிரீடம் சூட்டுவதுபோல கட்டுநாயக்கா வான்தளம் மீது நடந்த தாக்குதல் அமைந்துவிட்டது. முதலீட்டுத் துறையில் கடந்த வருடம் மட்டும் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பு 3000 கோடி ரூபா.

இவை தவிர எரிபொருள், சமையல்வாயு, உணவுப் பொருட்கள் என்பவற்றிற்காக அரசு கொடுத்துவரும் மானியத்தால் வருடா வருடம் 400 கோடி ரூபா இழப்பு.

பாதுகாப்புச் செலவீனத்துக்கென கடந்த வருடம் பத்தாயிரம் கோடி ரூபாவுக்கு மேல் செலவிடப்பட்டுள்ளது.

விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், உல்லாசப்பயணத்துறை என்பன மோசமாகப் பாதிக்கப்பட்ட ஏனைய துறைகளாகும்.

புதிய அரசாங்கத்தின் பொருளாதார சீர்திருத்த அமைச்சர் திரு. மலிந்த மொறகொட பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய புள்ளிவிபரங்கள் இவை.

சிறிலங்காவின் மொத்தத் தேசிய வருமானத்தில் 30 விழுக்காடு போருக்குச் செலவிடப்படுகின்றது. எஞ்சிய 70 விழுக்காடு நிதியை வைத்துக் கொண்டு ஆட்சியை ஓட்டமுடியாத அவலநிலையில் சிங்கள அரசு உள்ளது.

வெளிநாட்டுக்கடன்கள் மூலம் ஆட்சியை ஓட்ட வேண்டிய கேவலமான - கையறு நிலையை பொருண்மிய வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிங்களப் பொருண்மியத்தினது பணவீக்கத்தின் அளவு 13 விழுக்காடாக உள்ளது. ஒரு வருடத்திற்குள் 5 அல்லது 6 விழுக்காடாகப் பணவீக்கம் குறைக்கப்படவில்லையெனில் ஏற்கனவே பல்லாயிரம் கோடி ரூபாவாகவுள்ள பட்ஜெட் பற்றாக்குறை மேலும் 4000 கோடி ரூபாவால் அதிகரித்து விடும் அபாயம் உள்ளது என நிதி அமைச்சர் எச்சரித்துள்ளார்.

மோசமான பணவீக்கம், ரூபாவின் நாணயப் பெறுமானச் சிதைவு உட்பட பாரிய பொருண்மிய

அரசதிறைசேரியும் காலியான நிலையில் இருக்கின்றது. பணப்பற்றாக்குறை புதிய அரசாங்கத்தை உடனடியாகப் பாதித்துள்ள முக்கிய பிரச்சனையாகும்.

இந்தப் பொருண்மியப் பூட்டுக்குள்ளிருந்து சிறிலங்காவின் தேசியபொருளாதாரத்தை மீட்டெடுப்பது எப்படி! என பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் புதிய அரசாங்கம் சிந்தித்து வருகின்றது.

முன்னர், புலிகள் இயக்கத்துடன் பேச மறுத்துப் போரைத் தொடர்ந்த சந்திரிகா அரசாங்கத்தை வழிக்குக் கொண்டுவரும் நோக்குடன் உலக நிதிநிறுவனமான ஐ. எம். எவ் சிறிலங்காவுக்கு வழங்கவிருந்த 2500 கோடி ரூபா கடன் வசதியை தடுத்திருந்தது. இந்தப் பணத்தைப் பெற புதிய அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அத்துடன், அமைச்சர்களான ஜி. எல். பீரிஸ், ரவி கருணாநாயக்கா இருவரும் இணைந்து செயற்பட்டு ஐரோப்பிய யூனியனுக்கு ஆடை ஏற்றுமதிகளை அதிகரித்து பெருமளவு வருமானம் பெற முனைகின்றனர்.

ஆனால், போரை நிறுத்தி நிரந்தர சமாதானத்திற்காக நேர்மையுடன் பாடுபட்டால் மட்டுமே கொழும்புக்கு பொருண்மிய உதவி புரிய முடியும் என ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள் சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தெளிவாக்கியுள்ளனர்.

சிறிலங்காப் பொருளாதாரம் மரணப்படுக்கைக்குச் சென்றதற்குப் பிரதான காரணம் முன்னைய அரசின் போர்க்கொள்கைதான். எனவே, போரை நிறுத்தி - புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து சிறிலங்காப் பொருளாதாரத்திற்கு உயிர் கொடுக்கப் புதிய அரசாங்கம் முனைகின்றது.

சமாதான முயற்சியின் வெற்றியிலேயே சிறிலங்காப் பொருளாதாரத்தின் மீட்சியும் தங்கியுள்ளது என்ற உண்மையை திரு. ரணில் விக்கிரமசிங்காவின் புதிய அரசாங்கம் பூரணமாக உணர்ந்துள்ளது. △

(05ம் பக்கத் தொடர்ச்சி)

## மீண்டும்...

கொண்டே இருக்க முயல்வதற்கும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

இங்கே புலிகள் இயக்கம் அரசியல் ரீதியிலும்- இராணுவ ரீதியிலும் பலமான அத்திவாரத்திலேயே உள்ளது. அமைதி வழியிலான அரசியல் தீர்வுக்கு சிறிலங்கா அரசு அனுசரணையாக இருக்கத் தவறும் பட்சத்தில் புலிகள் இயக்கம் தனது ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும். இதையே தான் தலைவர் பிரபாகரன் அவர்கள் சென்ற மாவீரர் நாள் செய்தியிலும் முத்தாய்ப்பாகச் சொல்லியுள்ளார்.

''போர்ப்பாதையைவிட சமாதானத்திற்கான பாதை கடினமானது'' என பிரதமர் கூறியுள்ளார்.

ஆனால், சமாதான வழிமுறைகளில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும்படி சிங்களவரும் - தமிழரும் ஜனநாயக ரீதியில் வழங்கியுள்ள மக்கள் ஆணை என்பது புதிய அரசாங்கத்தின் பிரதான பலமாகவுள்ளது. சர்வதேச ஆதரவும் பெருமளவில் அதற்குண்டு. புலிகள் இயக்கமும் முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக உள்ளது. இந்தநிலையில் சமாதானப் பாதை கடினமானது என்ற ஐயுறவு பிரதமருக்கு ஏற்படவேண்டிய அவசியமில்லை.

பொறுமையும் - சகிப்புத்தன்மையும் - சமரசம் காணும் திறமையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பிரத்தியேகப் பண்புகள் என அரசியல் ஆய்வாளர்கள் அவரை மதிப்பிடுகின்றனர். அதனால், சமாதான முயற்சி வெற்றி பெற வாய்ப்புகள் அதிகம் என அரசியல் ஆரூடம் கூறவும் முனைகின்றனர். ஆனால், இந்த மனிதப் பண்புகளே - சில பிரத்தியேகமான புறச்சூழலில் - அவரது பலவீனமாக மாறி நிலைமைகளைத் தலைகீழாக ஆக்கி விடும் விபத்தும் நடக்க வாய்ப்புண்டு.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சனை வரலாற்றைப் பொறுத்தளவில் இத்தகைய முன்மதிப்பீடுகளும் - அரசியல் ஆரூடங்களும் பொய்த்துப்போனதே முழுமையாக நடந்துள்ளது.

தமிழருக்கு சமஸ்டி முறையில் அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கைத்தீவு சுதந்திரத்தைப் பெறமுன்பே ஆணித்தரமாகக் கருத்துக்கூறிய எஸ். டபிள்யூ. ஆர் . டி. பண்டாரநாயக்கா அவர்களே சிங்கள - பௌத்த வெறிகொண்ட முதலாவது ஆட்சியாளராக இலங்கையில் இருந்தார்.

தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து சிங்கள நாடாளுமன்றில் ''இரு மொழி ஒரு நாடு; ஒரு மொழி இரு நாடு'' என தத்துவம் பேசி தமிழர்களது இதயத்தை வென்ற கொல்வின் ஆர் . டி . சில்வாவே 1972 இல் அரசியல் அமைப்பு மாற்றத்தின் மூலம் தமிழருக்கு இருந்த ஒரு சிறு உரிமையையும் நீக்கி தமிழர்களை அடிமைகள் ஆக்கத் துணைபுரிந்தார்.

சமாதான தேவதை என்றும்- வன்முறை அரசியலால் கணவனையும் - தந்தையையும் இழந்த அபலைப்பெண் என்றும் - பல்லின உணர்வுகொண்ட ஜனநாயகவாதி என்றும் புகழப்பட்ட சந்திரிகா அம்மையார் மிகக்கொடூரமான சர்வாதிகாரியாகவும் - கொலைகார ஆட்சியாளராகவும் மாறி- மனிதாபிமானத்தையே காலில் போட்டு மிதித்து ஆட்சி புரிந்தார்.

இப்போது ரணில் விக்கிரமசிங்காவின் முறை வந்துள்ளது. ஆரம்பம் நம்பிக்கைதரும் விதத்திலேயே உள்ளது. ஆயினும் ,நம்பி ஏமாற தமிழ் மக்கள் இம்முறை தயாராக இல்லை. □

## விடுதலைப் போராட்டங்கள் சந்தித்த சவாலை

# தமிழீழம் வென்றிருக்கின்றது.

விடுதலைப் போராட்டங்கள் எழுந்த தேசங்களிலெல்லாம் சமூக கட்டுக்கோப்பும் அச்சமூக ஒழுக்க விதிமுறைகளும் சிதைந்து சின்னாபின்னப்பட்டுப் போவது தவிர்க்கவியலாத நியதியாகவே வரலாற்றில் இருந்து வந்துள்ளது. தேசிய விடுதலைக்காக போராடும் போது தேசியத்தின் அகவயக்கூறுகளாக இருக்க கூடியவை சிதைந்து சின்னாபின்னப்படுவது நடாத்தப்படும் போராட்டத்திற்கோ, அடையப்பெறும் விடுதலைக்கோ, ஆரோக்கியமானதல்ல. ஆயினும் போராட்டத்தின் போது எழுகின்ற இச்சவாலை தலைமை தாங்கிய போராட்ட அமைப்பு வெற்றி கொண்டதென்று சொல்லக் கூடியவாறு வரலாற்றில் இடமேதுமில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்த நியதியை சந்திப்பதில் விதிவிலக்கானதல்ல. ஆனால் சந்தித்த சவாலில் தமிழீழம் வெற்றிகொண்டே முன்னேறுகின்றது.

தமிழீழ விடுதலைப்போராட்டம் ஆயுதப் பரிமாணம் கொண்டு தீவிரமடையத் தொடங்கிய எழுபதுகளின் ஆரம்பம்தொட்டே தமிழர் வாழும் பிரதேசங்களில் சட்டம் - ஒழுங்கை நிர்வகிப்பதற்காக கட்டமைக்கப்பட்டிருந்த சிறிலங்காவின் காவல்துறை நிர்வாகம் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுதல் என்ற போர்வையில் இனவாத, அரச பயங்கரவாதத்தின் கருவியாக இராணுவ இயந்திரத்தின் பகுதியாக செயற்பட்டு வந்தது. இதன் காரணமாக எழுந்த யதார்த்தம் சிறிலங்காவின் காவல்துறையையும் அதனோடிணைந்த புலனாய்வு அமைப்பையும் தமிழீழ பிரதேசத்தில் முற்றுமுழுதாக இல்லாதொழிக்க வேண்டிய தேவையை போராட்டத்திற்கு ஏற்படுத்தியது.

இந்நிலையில் தொண்ணூறுகளின் ஆரம்பப்பகுதிகளில் பெருமளவு மக்கள் வாழும் பிரதேசங்களை ஆக்கிரமிப்பு இராணுவத்தினரிடமிருந்து புலிகள் மீட்டெடுத்த போது அவற்றை நிர்வகிக்கவேண்டிய தேவை எமது விடுதலை இயக்கத்திற்கு ஏற்பட்டது. இந்த வகையில் தமிழீழ அரச நிர்வாகத்தின் அடிப்படையாக தேசத்தின் மீதான விசுவாசமும் ஒழுக்கமும் செயல்வேகமும் கொண்டதொரு அமைப்பாக திரு. பா. நடேசன் அவர்களின் பொறுப்பின் கீழ் சட்டம் ஒழுங்கை நிர்வகிப்பதற்கான கடமைக்காக தமிழீழ தேசியத் தலைவர் அவர்களினால் 'தமிழீழ காவல்துறை' உருவாக்கப்பட்டது.

சிறிலங்காவின் காவல்துறையினரால் யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம் தீமூட்டி எரிக்கப்பட்ட 01-06-81 இன் பத்தாவது நினைவு நாளில், தமிழீழ மக்களிற்கான தனித்துவமான காவல்துறை அமைப்பின் முதலாவது தொகுதி காவல்துறை உறுப்பினர்களுக்கான தொடக்க பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1991ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் காவல்துறையின் ஆண், பெண் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு அதிகாரபூர்வமாக காவல்துறையின் செயற்பாடுகளை தொடக்கி வைத்தார்.

யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பு, 4 வது உலக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை, கலவரங்கள் என்ற போர்வையில் அவ்வப்போது நிகழ்ந்த தமிழர்களின் மீதான இனப்படுகொலைகள் என தமிழர்கள் மீதான சிங்களத்தின் பல அவலங்களிற்கு கருவியாகி நின்று, சிங்கள இனவாதத்தின் கையாட்களாக, இயங்கிய சிறிலங்கா காவல்துறை நிர்வாகத்தின் கீழ் நசுக்கப்பட்டு, ''காக்கிச்சட்டைக்காரர்'' எனப் பீதியுடன் நோக்கப்பட்டு வந்த சிறிலங்கா காவல்துறையின் நிறுத்தம் மக்களின் மனங்களில் சுதந்திரமானதொரு உணர்வை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் 91 இல் தனித்துவமானதாக உருவாக்கப்பட்ட தமிழீழ காவல்துறையின் தோற்றமும் கடந்த காலங்களில் அது செயற்பட்ட விதமும் மிகுந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மக்களிடையே உருவாக்கியது.


ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் தனது முதலாவது காவல்ப் பணிமனையை நிறுவிய காவல்துறை, படிப்படியாக கட்டுப்பாட்டில் உள்ள சகல பிரதேசங்களிலும் தனது அமைப்பை விரிவாக்கிக் கொண்டது. இன்று தமிழீழ காவல்துறையானது நன்கு நிறுவனமயப்படுத்தப்பட்டதொரு அலகாக, சமூகத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதிலும் குற்றச்செயல்களைத் தடுப்பதிலும் குறிப்பிடக் கூடிய மாற்றங்களை ஏற்படுத்தி நிற்கின்றது. காவல்துறையின் இன்றைய செயற்பாடுகளானது அதன் கடமைகளுக்கு எழுகின்ற தேவைகளுக்கேற்ப பல்வேறு பிரிவுகளாக இயங்க வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மக்களினால் முறைப்பாடு செய்யப்படும் சாதாரண பிரச்சினைகளும் குடியியல் பிரச்சினைகள் என வரையறுக்கப்படும் பொருட்கள் மீதான உரிமை பற்றிய பிரச்சினைகளும் இரு சாராரினதும் பூரண சம்மதத்துடன் பிரதேச காவல்பணிமனையினாலே இணக்கம் காணப்படுகின்றன. அதே வேளை இணக்கம் காணப்படவியலாத பிணக்குகளும், குடியியல் பிரச்சினைகளும் தமிழீழ நீதிமன்றின் விசாரணைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

சமூகத்தில் ஏற்படும் பாரிய குற்றங்கள், சமூகவிரோதச் செயல்கள், குற்றவியல். தொடர்பான முறைப்பாடுகள் என்பன காவல்துறையிரால் கையாளப்பட்டு குற்றவாளிகள் இனங்காணப்படுகின்றனர். பின்னர் தமிழீழ நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல்துறையின் சாட்சியங்களுடனும் எதிர்த்தரப்பு வாதங்களுடனும் வழக்கு 'திறந்த நீதிமன்றில்' (open court) விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, ஆட்கடத்தல் போன்ற பாரிய குற்றச்செயல்கள் சம்பவிக்கும் போது பிரதேச காவல் பணிமனையுடன் இணைந்து காவல்துறையின் பிறிதொரு பிரத்தியேக அலகான 'குற்றப் புலனாய்வுப் பிரிவு' செயற்பட்டு குற்றச் செயல்களில் ஈடுபட்டோரை தமது புலனாய்வு வலையமைப்பினூடாக இலகுவாகவும் வேகமாகவும் இனங் காண்கின்றது. தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்களின் நேரடி ஆளுகையின் கீழ் செயற்படும் குற்றத்தடுப்புப் பிரிவானது குற்றங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் குற்றச்செயல்கள் நிகழ்த்தப்படுவதற்கான காரணங்களை அறிந்து குற்றங்களைத் தடுப்பதற்கான வழி முறைகளை நெறிப்படுத்துகின்றது.

இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்ட அலகுகளின் ஊடான காவல்துறைச் செயற்பாடுகள் நிகழ்த்தப்படுகையில் நீதிமன்றுகளில் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டோர், தண்டனைக்காக தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவிற்கு அனுப்பப்படுகின்றனர். சீர்திருத்த பிரிவானது காவல்த்துறைப் பொறுப்பாளரின் நேரடி ஆளுகையின் கீழ் தனித்துவமாகச் செயற்படுவதால் காவல்துறையின் ஏனைய பிரிவுகளுக்கும் சீர்திருத்தப் பிரிவிற்குமான தொடர்புகள் தவிர்க்கப்படுகின்றன. இதன் மூலம் அதிகார துஸ்ப்பிரயோகம் நிகழ்த்தப்படுவதற்கான வாய்ப்பு தடுக்கப்படுகின்றது. குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களுங்கூட தமக்கான தண்டனையாக சீர்திருத்தத்திற்கான பணிகளிலேயே உட்படுத்தப்படுகின்றனர். அதேவேளை கடந்த சில காலங்களாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பிற்கமைய குடும்ப சூழ்நிலை கருதி தண்டனைக்காலத்தில் குற்றவாளிகள் வீடு சென்றுவரவும், தொழிற் பயிற்சிகளைப் பெறவும் அனுமதிக்கப்படுகின்றனர்.



தமிழீழ தேசியத் தலைவருடன்
தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன்

**- அன்புமாறன் -**

சமூகம் சார்ந்த காவல்துறையின் செயற்பாடுகள் இவ்வாறு இருக்க, நெருக்கடிகள் மிகுந்த பல கடுமையான போர்க்களங்களிலும் கூட தமிழீழ காவல்துறை தனது பணிகளை நிறைவேற்றி வருகின்றது- 09-07-2001 அன்று ஒன்றிணைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ காவல்துறையின் சிறப்புப் படையணியானது சவால்களும், நெருக்கடிகளும் நிறைந்த சூழலில் செயற்படும் திறமைமிக்க விசேட பயிற்சிகள் பெற்ற அணியாக உருவாகியுள்ளது.

தமிழீழ காவல்துறையின் இயக்கமென்பது உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் நின்று நோக்கும் போது ஒரு சாதாரண விடயம் அல்ல. ஒடுக்கப்படும் மக்களின் மீது வன்முறைகளைப் பிரயோகிக்கும் ஆக்கிரமிப்பு அரசுகள், எப்போதுமே தமது ஆக்கிரமிப்பு சட்டங்களையும் மக்கள் மீதான வன்முறைகளையும் காவல்துறை அமைப்பினூடாகவே செயற்படுத்தி வந்துள்ளன. இந்நிலையில் விடுதலைக்கான போராட்டங்கள், ஒடுக்குமுறை கருவியாக செயற்படுத்தப்படும் காவல்துறை அமைப்பை நிறுத்துவதன் மூலம் மக்களின் இயல்பான இருப்பினை உறுதி செய்ய முனைந்து நிற்பது உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் தவிர்க்க இயலாத நியதியாக இன்று வரை எழுந்து நிற்கின்றது.

துரதிஸ்ரமாக, ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற சமநேரத்தில், எதிரியின் காவல்துறையமைப்பை நீக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுவதால், சமூகத்தில் இயல்பாகவே உருவாகும் சமூக அநீதிகளுக்கும், சமுதாய ஒழுங்கு சீர்குலைவுகளுக்குமான தீர்வுகளை எட்ட முடியாதநிலை எழுவதும் இயல்பானதே. இதனால் சமூக சீரழிவுகள் தடுக்கவியலாத பிரச்சினையாக தலையெடுத்து வருகின்றன. உலக தேசிய விடுதலைப் போராட்டங்களின் வரலாறு கற்றுத் தந்த பாடமும் இதுவே.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மீதும் சபிக்கப்பட்டு இருந்த இந்த நியதியை, தனது தீர்க்க தரிசனத்தால் மாற்றிவைத்தார் தலைவர் பிரபாகரன் அவர்கள். யதார்த்தமாக தோன்றுகின்ற நெருக்கடிகளையும், சமூக சீர்கேடுகளையும் வெற்றிகொள்ள உலகின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் காவல்துறை கட்டமைப்பை -நீதி வழங்கல் செயற்பாட்டை, சட்டம் அமுலாக்கல் செயற்பாட்டை தமிழீழ விடுதலைப் போராட்டம் பிரசவித்துக்கொண்டது. விடுதலைப்போராட்டங்களின் வரலாற்றில் இது ஒரு திருப்புமுனை; பெரும் நெருக்கடிகளையும், நிதி ஆளணி பிரச்சினைகளையும் இன்றும் கூட எதிர்நோக்கி நிற்பினும் தமிழீழ காவல்துறையின் தோற்றமும் கடந்த பத்தாண்டு செயல் வளர்ச்சியும், உலக ஒடுக்குமுறை விடுதலைப்போராட்டங்களுக்கு உருவாக்கி வைக்கப்பட்ட புதியதொரு பாதையாகும். ○

## வழித்தடம்


# வீரத்தின் விளை நிலமாய்

உலகின் கவனமனைத்தையும் ஈர்த்து, விடுதலைப்புலிகளின் உச்சக்கட்ட போரிடும் ஆற்றலை வெளிப்படுத்திய, ஓயாத அலைகள் - 03 இன் ஆனையிறவு மீட்பிற்கான இத்தாவில் சமர்க்களம். கடல்வழியாகத் தரையிறங்கிய புலிகளின் படையணிகள் இராணுவ வலயத்தை ஊடுருவித் தமது நிலைகளை அமைத்திருந்தன.

மொத்தம்முப்பத்திநான்குநாட்கள் தொடர்ந்து கடுஞ்சமரின் தோல்வியின் பின் இத்தாவிலில் மட்டுமல்ல ஆனையிறவிலுங் கூடவே சிங்களத்தின் போர்வலிமை புலிகளிடம் தோற்றுப்போனது.

வரலாற்றுப் புகழ்மிக்க அந்த இத்தாவில் சமர்க்களத்தின் மூன்றாவது நாள் 29. 03. 2000, காலைப்பொழுது. அங்கே நின்ற போராளிகளுக்கு அன்றைய பொழுது சூடாகவே விடிந்தது.

கண்டி வீதியை மையமாகக்கொண்டு, மூன்று முனைகளில் எதிரி ஆனையிறவுப் பிரதேசத்திலிருந்து முன்னேறினான். கொடுமையான அந்தப் போர்க்களத்தில், துன்பங்கள் நிறைந்த அனுபவங்கள் பலதை ஏற்கனவே எதிரி அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தான். கடந்த இரண்டு நாட்களாக எதிரி இடையறாது அங்கே மேற்கொண்ட முன்னேற்றங்களையெல்லாம்



கனரக சுடுகலனுடன் போர் முகத்தில் புலிவீரர்

அவர்கள் முறியடிக்கவேண்டியிருந்தது. இலகுவான பின்னணிப் பாதைகள் இல்லாத நிலையில், போதுமானளவு ரவைகள், வெடிபொருட்களற்றிருந்த புலிகளின் அணிகள் தம்மிடமிருந்த மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக்கொண்டே ஏற்கனவே நடந்த இரண்டு நாள் சமரிலும் பல முனைகளிலும் முன்னேறிய இராணுவத்தினரை முறியடித்து வெற்றிபெற்றிருந்தன.

அதிகாலையில் தொடங்கிய இன்றைய சமர் மிகவும் உக்கிரமானதாக இருந்தது. வழமைக்கு மாறாக எதிரி இன்று ஆனையிறவுப் பகுதியிலிருந்து ஐந்து டாங்கிகள் சகிதம் முன்னேறினான். தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த எமது நிலைகள் இராணுவத்தின் அகோரமான எறிகணை வீச்சில் சிதைந்துகொண்டிருந்தன. எதிரி படு வேகமாக முன்னேறினான். டாங்கிகளும் கனரக வாகனங்களும் அணிவகுத்து முன்னே வர பெருந்தொகையில் படையினர் சூழ்ந்த யுத்தக்காடாக மாறியது அந்தக்களம்.

சில மணித்தியாலங்களிலேயே கண்டி வீதியின் இருபுறமும் முன்னேறிய எதிரியால் எமது நிலைகள் ஊடறுக்கப்பட்டு விட்டன. காவலரண் வரிசையின் இரு பகுதிகளூடாக உள்ளே நுழைந்த எதிரி, இப்போது மூன்றாவது முனையான பிரதான வீதியின் வழியே ஊடுருவதற்கு முயன்றுகொண்டிருந்தான்.

அவர்கள் விடவில்லை. செக்சன் லீடர் வீரன், இயல்வாணன், வளநெஞ்சன், சேரக்குன்றன் என இன்னும் மிகச்சிலர் மட்டுமே அங்கே தனித்திருந்தனர். பின்வாங்கத் தயாரில்லா அவர்களை எதிரி சூழத்தொடங்கினான்.

பிரதான வீதியின் அருகில் அவர்கள் இருந்தனர். தன்னிடமிருந்த ஒரேயொரு P.K இயந்திரத் துப்பாக்கியால் தொடர்ந்து சுட்டுக்கொண்டிருந்தான் இயல்வாணன். இருபுறமும் பெரும் எண்ணிக்கையில் முன்னேறிய எதிரியின் ஆட்பலம், டாங்கிகள் சகிதம் மனிதப்பிரவாகமென அவர்களைச் சூழ்ந்து கொண்டுவிட்டது.

அவர்களுடனான தொலைத்தொடர்புகள் இறுதியாக அற்றுப்போனவுடன் கட்டளைப்பீடம் பரபரப்பானது; அது கைவிடமுடியாத ஒரு நிலை. இத்தாவில் சமர்க்களத்தினது மாத்திரமல்ல, ஆனையிறவு மீட்பிற்கான தலைவரது வியூகத்தின் தந்திரோபாய முடிச்சு அது. அங்கே அமைக்கப்பட்டிருந்த வியூகத்தின் உயிர்நாடியும் அதுதான். இப்போது அங்கேயிருந்த வீரர்கள் கொல்லப்பட்டிருப்பர். மாற்றுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. மீண்டும் அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளிக்காமல் போனது.

அடுத்து என்ன செய்வது என்ற தவிப்பு எல்லோரையும் பிடித்துலுக்கிக் கொண்டிருந்தது.

ஆனாலும், சுற்றிச் சூழ்ந்து விட்ட எதிரிகளின் நடுவே அவர்கள் இன்னமும் உயிருடன் இருந்தனர். தொடர்ந்தும் இராணுவத்தினரை எதிர்த்து சண்டையிட்டுக்கொண்டிருந்தனர்.

பிரதான வீதியால் வந்த இராணுவத்தினரை ஒவ்வொருவராய் வீழ்த்தினர். தொடர்நது வந்த கனரக வாகனம் ஒன்றும் அதன் பின்னால் வந்த இராணுவத்தினரும் இயல்வாணனின் P. K தாக்குதலினால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அப்போது தான் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டிருந்த அவர்கள் சற்றும் எதிர்பார்க்காத அந்தத் துரதிஷ்ரம் நிகழ்ந்தது. அவர்களிடமிருந்த ஒரேயொரு கனரக துப்பாக்கி -PK MPMG இயங்கு நிலை தடைப்பட்டு சுடமறுத்தது.

எல்லாத்திசைகளிலிருந்தும் இராணுவத்தினர் அவர்களை நோக்கி முன்னேறத் துடித்துக் கொண்டிருந்தனர். இராணுவத்தினரின் முன்னேற்றத்திற்கான இதுவரையான தடையாக அவர்கள் மட்டுமே இருந்தனர். இப்போது அவர்களிடமிருந்த துப்பாக்கியும் சுட மறுத்துவிட்டது.

இராணுவம் நெருங்கி வந்துவிட இயல்வாணனுடைய தோழனொருவன் வீசிய கையெறிகுண்டு வெடித்துச் சிதறியது. எதிரி அந்தத் திகைப்பில் இருந்து மீள்வதற்குள் கிடைத்த சிறியதொரு அவகாசத்தினுள் தன் துப்பாக்கியை சீர்படுத்த முயன்றான் இயல்வாணன். ஆனாலும், முடியவில்லை. மீண்டும் இராணுவம் அவர்களின் நிலையை நெருங்கியது.

மிகவும் நெருக்கடியானதொரு சூழல். தடுப்பதற்கு வழியில்லை. இயல்வாணன் தனித்து இயங்கத் தொடங்கினான். ஒவ்வொன்றாய் ரவையேற்றினான். தனித்தனியே மீண்டும் ஆரம்பித்த சூடுகளில் இராணுவத்தினர் அவனது நிலையின்முன் விழத்தொடங்கினர்.

எனினும், பெருந்தொகையில் வேகமாக முன்னேறும் இராணுவத்தைத் தொடர்ந்தும் அவர்களால் தடுக்கமுடியவில்லை. எதிரிகள் அவர்களை நெருங்கியவாறே இருந்தனர்.

செக்சன் லீடர் வீரனுடைய தொலைத்தொடர்புச் சாதனம் ஒருவாறு தனது கட்டளைப்பீடத்துடன் தொடர்பை ஏற்படுத்தியது. கட்டளைப்பீடத்தில் புதியதொரு பரபரப்புத் தோன்றியது. இராணுவத்தினரால் சூழப்பட்டுவிட்ட பிரதான வீதியிலிருந்து ஒலித்த வீரனுடைய குரல் கட்டளைப்பீடத்திற்கு உற்சாகமானதொரு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

''றோமியோ, றோமியோ, இப்ப ஆமி எங்கள நெருங்கீட்டான்.''
''எங்களுக்கு ரவுன்ஸ் எல்லாம் முடிந்துவிட்டது.''
''பிரச்சினையில்லை, எங்களைப் பார்க்காதையுங்கோ. நாங்கள் நிக்கிற இடத்திற்கு செல் அடியுங்கோ. வேகமாய் எங்கட நிலையளை வைச்சு ஆமிக்குச் செல் அடியுங்கோ.''

யாருமே எதிர்பார்க்காத அவர்களுடைய உணர்வுகள் கட்டளைப்பீடத் தொலைத்தொடர்புக் கருவியில் ஒலித்துக்கொண்டிருந்தது.

அவர்கள் இன்னமும் தோற்றுவிடவில்லை. இன்னமும் அவர்கள் தமது நிலைகளை எதிரியிடம் செல்ல அனுமதித்துவிடவில்லை. எதிரியால் கைப்பற்றப்பட்டுவிட்டதாக எண்ணியிருந்த பிரதேசத்திலிருந்து அவர்கள் தொடர்ந்தும் போரிடுகின்றனர். கட்டளைப்பீடம் மீண்டுமொரு முறியடிப்புச் சமரிற்குத் தயாராகியது.

→

இராணுவம் அவர்களுடைய நிலைகளினுள் புகுந்துகொண்டால் வெடிக்கத் தயாரான கையெறி குண்டுகளுடன் அவர்கள் போரிட்டனர். அவை வார்த்தைகளின் விபரிப்பிற்கு அப்பாற்பட்ட போர்க்களத்தின் கொடிய கணங்கள். கண்களின் முன்னே, மிக அருகில், அவர்களைக் கொல்லும்வெறியுடன் வரும் எதிரிகளை எதிர்த்துத் தொடர்ந்தும் சண்டையிட்டனர். உச்சமான அவர்களின் மனோதிடம், போரிடத் தயாரான ஆற்றல், இறுதிவரை வென்றுவிடத் துடிக்கும் விடுதலை உணர்வு அவர்களைத் தொடர்ந்தும் இயக்கியது.

வீரனது தொலைத்தொடர்புச் சாதனம் சொல்லிய இலக்குகளை எறிகணைகள் தாக்கின. இயல்வாணனுடைய P.K சுட்டுக்கொன்றஇராணுவத்தினரது சடலங்கள் அவர்களது நிலைகளைச் சுற்றிக் குவியத்தொடங்கின. கொஞ்சம் கொஞ்சமாக அவை எதிரியின் மூர்க்கத்தை உடைத்தன.

இத்தாவில் களத்தை அன்று எதிரியிடமிருந்து மீட்டுத்தந்த வீரர்களை மீட்பதற்கான எமது முறியடிப்பு அணிகள் அவர்களை நெருங்கியபோது, வீரன், இயல்வாணனுடைய காவலரண்களைச் சுற்றி மட்டும் கொல்லப்பட்ட எண்பத்தைந்து இராணுவச் சடலங்கள் கிடந்தன.

★ ★ ★

இரண்டாம்கட்ட ஈழப்போரின் ஆரம்ப ஆண்டுகள் அவை. 26.11.1992, பலாலித் தளத்தின் ஒருபகுதி. முன்னணிக் காவலரண்கள் அமைந்திருந்த கண்ணிவெடிகள், மிதிவெடிகள் நிறைந்த இராணுவ முன்னரங்க வேலி, நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள தொடர் காவலரண்கள், மின் ஒளி பாய்ச்சப்பட்ட இரவு நேர அவதானிப்பு வலயம், சிறிய ஒலியும் பேரொலியாக மாறும் பயங்கரமானதொரு அமைதி. இத்தனைக்கும் அப்பால் தொடர் கண்காணிப்பில் இருக்கும் ஒரு பிரதான வீதியையும் கடந்தே அந்த அணி தன் இலக்கை எட்டவேண்டியிருந்தது.

அப்போதுதான் அது நிகழ்ந்தது. யாருமே தாக்குதலுக்கான இறுதி இலக்கை அப்போது நெருங்கியிருக்கவில்லை. நிசப்தமான அன்றைய இருட்பொழுதின் ஆழ்ந்த அமைதியை குலைத்தது ஒரு வெடியோசை. இராணுவ முன்னரங்கை ஊடுருவி பின்னணி ஆழ்நிலைகள் நோக்கி நகர்ந்துகொண்டிருந்த காவலன் என்ற போராளியின் கால்களில் ஒன்றை அங்கே வெடித்த மிதிவெடி சிதைத்திருந்தது.

எல்லோருடைய விழிகளிலும் கலவரத்தின் சாயல். அடுத்து நடக்கப்போவது என்ன? நிச்சயமாக இதச் சத்தத்தை எதிரி கேட்டிருப்பான். திகைப்பின் கதறல். வேதனையின் புலம்பல், காயப்பட்டுவிட்ட ஒரு மனித உயிரின் இயல்பான அனுங்கல் எதிரிக்கு எம்வரவைச் சொல்லிவிடும். அன்றைய சண்டை அத்துடனேயே, எம்மால் தொடங்கப்படாமலேயே முடிவடைந்துவிடும். அந்தப் பிரதேசத்தில் சூழ்ந்திருந்த எமது முன்னணி வீரர்கள் பலரை நாம் இழக்கநேரிடும். இலக்குகள் எவையும் வெற்றி கொள்ளப்படாமலேயே எமது திட்டம் எதிரியால் தோற்கடிக்கப்பட்டுவிடும்.



வளலாய் பகுதிக் காவலரண் வரிசையைத் தாக்கி, அதன் பின்னான சில மினி முகாம்களையும் அழிப்பதற்கான நகர்வுகளைப் புலிகளின் படையணிகள் செய்துகொண்டிருந்தன.

முன்னரங்க காவல் நிலைகள் தகர்க்கப்படும் சமநேரத்தில் ஏற்கனவே ஊடுருவி நிலைகொண்டிருக்கும் அணிகளால் தளத்தின் உட்புற இராணுவ முகாம்களும் தாக்கப்படுவதாக அன்றைய எமது திட்டம் இருந்தது.

பின்னணியில் அமைந்திருந்த இந்த மினிமுகாம்களை தாக்கும் அணியாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நியமிக்கப்பட்டது. அதற்காக இராணுவ நிலைகளை ஊடறுத்து ஏழுகிலோமீற்றர் வரையான தூரம் அவர்கள் இரகசியமாக நகரவேண்டியிருந்தது.

அடுத்தது பற்றிய அவநம்பிக்கையுடன் எல்லோரது கவனமும் காவலன் பக்கம் திரும்பியது.

வெடிப்பின் அதிர்வுகள் அடங்கியபோது கலைந்த புகையினூடு அவன் அசைவது தெரிந்தது. துண்டிக்கப்பட்டு சிதைந்திருந்த அவனது காலில் இருந்து குருதி கொப்பளித்துப் பாய்ந்தது. சத்தமில்லை மெல்ல கையசைத்து அருகிலிருந்த தோழனை அழைத்தான்.

''மச்சான் நான் சத்தம்போட மாட்டன். நீங்கள் தொடர்ந்து முன்னேறுங்கோ''

பயம் படர்ந்திருந்த தோழர்களின் முகத்தில் அதிர்ச்சி பரவியது. அந்த வார்த்தைகள் எவ்வளவு அற்புதமானவை. அவனது அந்த வார்த்தைகள் அன்றைய எம் வெற்றியை சாத்தியமாக்கியது. என்று சொன்னால் யாரால்தான் அதை மறுத்துவிட முடியும். ☆

துயிலும் இல்லங்களிலிருந்து எமது தோழர்களை எழுப்பமுடிந்தால் .. அவர்கள் ஒவ்வொருவரும் கூறும் வரலாறுகளால் இந்த வையமே வியந்து போகும். அதுவும் ஒருவருடத்திற்கும் மேலாய் எம் போராட்டத்தின் இதயப்பரப்பில் எதிரி தொடுத்த 'ஜயசிக்குறு' களத்தின் கதைகள் மலைப்பை ஏற்படுத்தும். அத்தகைய களத்தில் சுமார் எட்டுமாதங்கள் வாழ்ந்தவன் மேஜர் லெனின்/சொல்வழகன். அவன் அக்களத்தில் தன் உணர்வுகளை எழுதத் துடித்திருந்தான். ஒருசில நாட்கள் மட்டுமே அவன் எழுதிவிட்டுப் போயிருந்த குறிப்பேடு ஒன்று இப்போது என் கரங்களில் இருக்கிறது.

## "சகாப்தம் படைத்த புளியங்குளம்"

ஒன்பது வருடங்களாய் இத்தேசத்தின் பல போர்க்களங்களில் வாழ்ந்த அனுபவம் வாய்ந்த அந்தப் போராளியின் பேனா, 'ஜயசிக்குறு' களத்தின் எங்கோ ஒரு காப்பரணில் இருந்து, அக்களத்தில் தான் அனுபவித்தவற்றை அந்தக் குறிப்பேட்டில் சிந்தியிருந்தது.

புளியங்குளம், 10.09.1997 என திகதியிட்டு அவன் எழுதியிருந்தான்.

*''தரமான அட்டை அமைப்பில் எங்கள் தலைவனின் வண்ணப் படம், கைவிரல்களை முஷ்டியாக பிடித்தபடி முகத்தில் தெரியும் வெற்றிப் புன்னகை எனக்கு மகிழ்வையும் பெருமிதத்தையும் தருகிறது. அதன் கீழே காணப்படும் 'இது புளியங்குளமல்ல புலிகளின் புரட்சிக்குளம்' எனும் வாசகம் 'சகாப்தம் படைத்த ஸ்ராலிங் கிறாட்' எனும் புத்தகத்தை நினைவிற்கு கொண்டுவருகிறது''*

*''ஆம், வழமையாக எமக்குத் தரப்படும் குறிப்புப் புத்தகங்களைப் போல் இதனையும் கருதமுடியவில்லை. இந்தப் புளியங்குளத்திலும், 'ஜயசிக்குறு' வுக்கு எதிராக எம தோழர்கள் சண்டையிட்ட எல்லா இடங்களிலும் அவர்கள் காட்டிய வீரதீரத்தினதும், சிந்திய குருதியினதும், அவர்களின் தியாகத்தினதும் விளைபொருளாக உருவாகிக் கொண்டிருக்கும் வீரவரலாற்றின் சிறு சான்றாகவே இந்தக் குறிப்புப் புத்தகம் தோன்றுகிறது. எனவே இதில் வழமையான விடயங்களையும் நிர்வாகக் கணக்குகளையும் குறித்துவைக்க என்மனம் இடம்தரவில்லை. இதில் புளியங்குளத்தின் கதையை ஜயசிக்குறுவின் கதையை (எனக்குத் தெரிந்தவற்றை மட்டும்), என்மன உணர்வுகளை நினைவுபடுத்தி குறித்துக் கொள்ள விரும்புகிறேன்.''*

*''பின்னொருகாலத்தில் சகாப்தம் படைத்த புளியங்குளத்தின் வரலாற்றை எழுத முயலும ஒருவருக்கு சிறுசான்றுக்குறிப்பாக இது இருக்குமென நினைக்கிறேன். ஜயசிக்குறுவின் பின் நான் உயிருடனிருந்தால் சரியான முறையில் எல்லாவற்றையும் தொகுத்து எழுதுவேன்.''*

தமிழர் வரலாறு கண்ட வீரமும், அர்ப்பணிப்பும், துன்பங்களும் நிறைந்த அந்த நீண்ட யுத்தகளத்தில் போராளிகளின் அணியொன்றை வழிநடத்திய அந்த வீரன் தன் உணர்வைப் பிழிந்த சம்பவமொன்றை அதே நாளில் எழுதியிருந்தான்.

*''இன்று 10.09.1997 புளியங்குளம் பாலத்தை மாற்றி அமைக்கப்பட்ட பதுங்ககுழியிலிருந்து இதனை எழுதுகின்றேன். கனகராயன் குளத்தில் அகோரமான ஆட்டிலறி செல்சத்தங்கள் கேட்கின்றன. அங்கு கடுமையான சண்டை நடக்கிறது. நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் சந்திக்கு வர முடியாது இழப்புகளை சந்தித்த எதிரி, சில நாட்களுக்குமுன் 1½ கி.மீ தூரமளவிற்கு பின்னே சென்று பெரிய பாலத்தடியில் நிலையெடுத்து, தனது வியூகத்தை மாற்றிக்கொண்டு, சன்னாசிப்பரந்தனிலிருந்து சின்னடம்பன் - கனகராயன்குள வீதியால் நேற்றுமுன்தின இரவே முன்னேற ஆரம்பித்திருந்தான்.''*

*''----இன்று கனகராயன் குளத்தில் நடைபெறும் மோட்டார் செல் வீச்சில் எமது மற்றைய கொம்பனியைச் சேர்ந்த அம்பிகைநாதன் எனும் தோழன் வீரச்சாவடைந்ததாக அறிகின்றேன். ஒரு வாரத்திற்கு முன்பு அவன் அந்தக் காவலரணில் இருந்தான். நடந்துகொண்டிருந்த செல் வீச்சின் மத்தியிலும் காவலரணைப் பலப்படுத்த மண்மூட்டை போட்டுக் கொண்டிருந்தான். 'மடையா செல்லடிக்கிறான் இந்தநேரம் வேலை செய்கிறாய் உள்ளே போ பேந்து வேலைசெய்யலாம்' என கடுமையாகவே பேசியிருந்தேன். இன்று அந்த காவலரண் உறுதியாக நிற்கின்றது. பல போராளிகளை 'செல்' மழையிலிருந்து, அது காப்பாற்றுகின்றது. இனியும் அது அசையாது நிற்கும். தன் கடமையை தவறாது செய்யும். ஏனெனில், அதில் மரக்குற்றிகளும் மண்மூட்டைகளும் மட்டுமல்ல தியாகிகளின், மண்ணிற்காக மரித்த மாவீரர்களின் வியர்வையும், இரத்தமும் கலந்திருக்கின்றது.''*

அன்றைய நாட்களை நினைக்கும்போது இப்போதும் புல்லரிக்கிறது. ஜயசிக்குறுவில் எமது தோழர்கள அனுபவித்த களவாழ்வின் கடினம் கற்பனைக்கு எட்டாது. மனித அலைகளாக பிரவாகம் எடுத்து வந்த எதிரிப் படைவெள்ளத்தை எதிர்கொண்ட அந்தக் களத்தில் எம் வீரர்களின் வாழ்வு எப்படி இருந்தது? 01.10.1997, புளியங்குளத்தில் மேஜர் லெனினின் களஅனுபவத்தைப் பாருங்கள்.

*''கடந்த ஒருவாரமாக நடப்பது போலவே 120மி.மீ செல்கள் எம்மை துயில் எழுப்பின. எந்தநேரம் என்றில்லாமல், இடைவெளியின்றி திடீர் திடீரென ஒரே நேரத்தில் பல செல்கள் வந்துவந்து விழுந்து வெடித்தன. எனினும், இதனால் எமது எந்தக்கடமைகளும் தடைப்படவில்லை. தோழர்கள் குளித்தார்கள். செல் குத்தும் சத்தம் கேட்டதும் எல்லோரும் கிணற்றுக்குப் பக்கத்திலேயே இருக்கும பங்கருக்கு ஓடினார்கள் அது விழுந்து வெடித்ததும் ஓடிச்சென்று இரண்டுவாளி அள்ளிக் குளித்தார்கள். பின்னர் மீண்டும் செல-- இவ்வாறே எல்லோரும் மாறிமாறி குளித்தார்கள். சிலர் சோப் போட்டவாறே பத்துநிமிடத்திற்கும் மேலாக பங்கருகுள் நின்று தேய்த்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறே நானும் ஒரு மாதிரியாக குளித்து முடித்தேன். பின்னர் அப்போது புளியங்குள பாலத்திலிருந்த கொமபனிப் பொறுப்பாளரிடம் சென்று கதைத்துவிட்டு எமது பகுதிக் காவலரண்களை சுற்றிப் பார்த்தேன்''.* அந்த வரிகள் முடிக்கப்படாமல் அப்படியே இருந்தன.

1998 பெப்ரவரி 05இல் கிளிநொச்சிப் படைத்தளம் மீதான ஊடறுப்புச் சமரில் ஒரு அணியை தலைமை தாங்கி போரிட்ட மேஜர் லெனின், திறக்கமுடியாத புகளுடல் பேழையிலே வந்தான். இப்போது அவன் விசுவமடு மாவீரா துயிலும் இல்லத்தில், ''அ'' தொகுதியின் 6வது நிரையில் 49வது இலக்க துயிலறையில் ஆழ்துயிலில் இருக்கிறான்.

- அகிலன் -

# இன்னும் மழையே தூறவில்லை நீஒழுக்குச்சட்டிக்கு ஓடித்திரிகிறாய்.

உலைக்களம்

வியாசன்

மீண்டும் வெள்ளைப்பூ சூடிக்கொண்டு
வீசுகிறது காற்று.
வானத்திலேறி வன்னிவரை வந்துபோகிறது
அலகில் 'ஒலிவ்' இலை தாங்கிய தூதுப்புறா.
சாளரங்களைத் திறக்கும் போதெல்லாம்
சந்தனம்பூசிய சமாதான வாசம் வருகிறது.
இரவுமுழுதும் கண்ணீர் வாழ்வு
கழிந்தது போன்ற கனவு.
நிவாரணவரிசையில் நின்றுகளைத்த கால்களுக்கு
கட்டாய ஓய்வென்ற சட்டமே வருகிறதாம்.
வார் அறுந்த செருப்பாய்க்
கிடக்கும் தெருக்களுக்கு
இனித்தார்பூசப்படுமாம்.
கோயிலெங்கும் மகேஸ்வரபூசைக் கோலாகலம்.
ஆமிக்காரர்களுக்கும் சாமிகும்பிடும்
விடுமுறையாம்
போராளிகளும் இனிப் பூப்பறிக்கப் போகலாம்.
நெருஞ்சிப் பற்றைக்கு முளளகன்று போனதாய்
சந்தோஷமேகங்கள் நலைதடவிப் போகிறது.
ஆண்டவரே! இனியேனும் அமைதியைத் தாரும்.
கூண்டுதிறந்து பறக்கும் குதூகலம் அருள்வீர்
இனியாயினும் எமக்கு இரக்கமாயிருப்பீர்.
கண்டிவீதி ஏறிவரும் கனரக வாகனங்களில
மாவும்; சீனியுமாம்.
அட; கொக்காவிலில் பெற்றோல்செற்றாம்.
பங்குனிமாதம் மினசாரமும்
சித்திரை மாதம் யாழ்தேவியும் வருகிறதாம்.
காவலரணிலிருக்கும் பிள்ளைகளுக்கு
புனர்வாழ்வு அமைச்சு புறியாணி அனுப்புமாம்.
இவைகளுக்காகத்தானே போராடினோம்
இனியென்ன ஆயுதங்களைக் கீழேவைத்துவிட்டு
அரிசி, பருப்புவாங்க ஆயத்தமாகுவோம்.
துயிலுமில்லங்களில் இனிச் சோககீதமில்லை;
பாட்டும், கூத்துமாகப் பகலிரவு கழியும்.
போர்க்களப் புரவிகளை அவிழ்த்து விடுவோம்
எங்கேனும் போய்ப் புல்மேயட்டும்.
அட பைத்தியக்காரர்களே!
இத்தனை அவசரம்தான் எதற்கு?
அஸ்ரா மாஜரினுக்காகவா ஆரம்பித்த
போராட்டமிது?
ஆவலாதிப் பேய்களாக ஏனிந்தப் பறந்தடிப்பு?
நிதானம் தவறாமல் நினைத்துப் பார்
முன்னைய அனுபவங்களில் முகம்கழுவிக் கொள்.
நல்லது நடக்குமென நம்புவோம்.
அதற்காக அவசரப்படல் ஆகாது.
வாசல் வரும் காற்றை வரவேற்பதென்பதும்
பாதம் கழுவுவதும் ஒன்றல்ல.
கைகுலுக்குவது நாகரிகம்
கமககட்டில்சால்வை வைப்பது அடிமைத்தனம்.
பெரிதாக நம்பிவிடாதே
அம்மணி அரங்குவிட்டு இறங்கவில்லை.
இப்போதும் அவரேதான் ஆட்டநாயகி.
தோற்றுப்போனாரெனும் கூற்றென்னவோ
உண்மையெனினும்
இன்றும் நாகாஸ்த்திரங்கள் இருப்பது
நாயகி கையிற்தான்.
எய்யார் எமகெனபதற்கு என்னஉத்தரவாதம்.
ஐயா நல்லவராகவே இருக்கட்டும்
அஸகிரிய பீடம் அனுமதிகக வேண்டுமே.
வன்னிக்கு வந்துபோகும் வைத்தியர்
மனிதாபிமானிதான்
இருந்துமென்ன
கணடி மல்வத்தபீடம்தானே கட்டளையிடுவது.
இன்னும் மழையே தூறவில்லை
நீ ஒழுக்குச் சட்டிக்கு ஓடித்திரிகிறாய்.
இன்னும் காற்றே வீசத்தொடங்கவில்லை
நீ பட்ட மேற்ற நூல்தேடித் திரிகிறாய்.
எத்தனை தடவைகள் ஏமாற்றப்பட்டாய்
பட்டும் பட்டுமேன் உனக்குப் புத்திவரவில்லை?
விடுதலை அவாவிய குருவியே!
தீனிபொறுக்குவதற்காகவா உனக்குச்
சிறகுமுளைத்தது?
சூரியனைத் தொட்டுவரப் புறப்பட்ட நீ
அரிசிக்கும் பருப்புக்குமேன் அவசரப்படுகிறாய்?
அவர்கள் கவனமாகக் காலெடுத்து
வைக்கின்றனர்
நீ வேகமெடுத்து விழுந்தெழும்பப் போகிறாய்.
கானல் நீரில் வாய்நனைக்க நினைக்கிறாய்
கவனம் மீண்டும் கண்ணீரைக்
குடிக்கவேண்டிவரும்.
விடுதலை பெறுவதென்பது
பேரம்பேசும் வியாபாரமல்ல...
அது எமக்குரிய இயல்பின் இருப்பு.
தானமாகத் தருவதற்கு விடுதலை
சாப்பாட்டுப் பார்சலல்ல.
தொடுத்த அம்புக்கேற்ற இலக்கும்
கொடுத்த விலைகளுக்கேற்ற தீர்வுமே
மேசைக்குப் போகும்போது முன்மொழிய
வேண்டும்.
அலரிமாளிகையை நாங்கள்
கேட்கப்போவதில்லை.
பெரகராவில் ஊர்வலம் போகும்
பெரியயானையை
இரவலாகவும் நாங்கள் கேட்கப்போவதில்லை.
எமக்கான கூடு எமக்கு
எமக்கான பாகம் நமக்கு
இவைதவிர எமக்கு எதுவுமே வேண்டாம்.
ஆகாயம் பூச்சொரியும் அழகைப் பார்த்தபடி
தாயாளின் மடியுறங்கும் சந்தோஷம் வேண்டும்.
மாரிமழையில் நனைந்தபடி எம் ஊரிற்திரியும்
மகிழ்வொன்றே போதும் நமக்கு.
குனியவும் நிமிரவும் யாரும் கட்டளையிடாத
ஒரு வாழ்வுபோதும் நமக்கு.
தருவாரெனில் சந்தோஷம்;
பாதிவழியில் பழையபடி முருங்கையேறில்
வேதாளம் பாதாளத்துக்குத்தான் போகும்.
சின்ன மாங்கனித் தீவை
பாதி பாதியெனப் பங்கிடுவதே நல்லது
நீதியும் அதுதான்.
மேசையில் பேசி தீர்வென்ன வரும்?
சரி; பேச்சுவார்த்தையின்பின்னே என்ன
தருவார்கள்?
திம்புவில் தொடங்கி சுயாட்சிவரை போகுமா?
இது விட்டுக்கொடுக்கும் இறுதிவிடயமல்ல.
புள்ளியே இதிலிருந்தே ஆரம்பிக்கவேண்டும்.
சம்மதிக்குமா சிங்கள அரியணைகள்?
தமிழரென்றாலே இழிபிறவிகளென்ற
எகத்தாளம் அவர்களுக்கு;
தமிழர் வந்தேறு குடிகளென வகைப்படுத்தி
சின்ன நெஞ்சிலேயே நஞ்சூட்டப்பட்டுள்ளது;
நூலின் நீளமறியாது பட்டத்துக்கு
வால்கட்டமுடியாது.
அடித்த நோவுக்கு எண்ணைபூசுவது
இருக்கட்டும்
எமக்கு இனிமேல் அடிக்கமாட்டோமென்று
உத்தரவாதம் தரட்டும்.
தருவார்களா சங்கமித்தையின் வெள்ளரசு
விழுதுகள்.
இரத்தத்தில் விழுத்தும் யுத்தத்தை
விரட்டுவோம்.
யாருக்குத்தான் போரின்மீது காதல் வரும்?
சாந்தியும் சமாதானமுமே சந்தோஷமானது.
போரில்லா உலகையே நாமும் பெரிதும்
விரும்புகிறோம்
எம்மை யுத்தத்துக்கு அழைத்தது யார்?
எம்மை ரத்தத்தில் கிடத்தியது யார்?
அல்லிவேர் கூட விடாது அறுத்தெடுத்தது
யார்?
இன்று வெள்ளைக் கொடிபற்றி விரிவுரை
செய்பவர்கள்
கண்டிவீதி கற்பழிக்கப்பட்டபோது
கதைக்கவில்லையே.
''சத்ஜெய'' கிளிநொச்சி புகுந்தபோது
இவர்கள் பேச்சிழந்து ஊமையாயிருந்தனர்.
சரி; பழையனகழித்து புதியன வகுப்போம்.
கடந்த காலத்தைக் கனவாய் மறந்து
வருங்காலத்தை வடம்பிடித்திழுக்க வருக.
வன்னி வரவேற்கக் காத்திருக்கிறது;
ஆத்மசக்தியோடு மேசையில் அமருவோம்.
ஏமாற்றுவதற்கானது இந்த நாடகமெனில்
ஏமாறப்போவது நாமல்ல...
போரும், பேச்சும் எமக்கு விடுதலைக்கானதே
பேசலாம் வருக.